
# சந்நிதியான்

## அற்புதங்கள்

பாகம் இரண்டு



ந. அரியரத்தினம்

2010

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்நிதியான்

அற்புதங்கள்

பாகம் இரண்டு

13945 cc

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

ந. அரியரத்தினம்

2010

கனடா

288287

288287 cc

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைப்பு : சந்நிதியான்

விடயம் : அற்புதங்கள் (பாகம் இரண்டு)

ஆசிரியர் : திரு. ந. அரியரத்தினம்

பதிப்பு : முதற்பதிப்பு 2010 (20-08-2010)

பதிப்புரிமை : ஆசிரியர்க்கு

பக்கம் : 64

அச்சுப்பதிப்பு : விவேகா அச்சகம்-கனடா




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளே........................ பக்கம்


| | | |
|---|---|---|
| முன்னுரை - | | 5 |
| ஆசியுரைகள் - | | 8-10 |
| அணிந்துரை - | | 11 |
| வாழ்த்துரை - | | 13 |
| சந்நிதியான் - | ஒன்று | 14 |
| சந்நிதியான் - | இரண்டு | 19 |
| சந்நிதியான் - | மூன்று | 23 |
| சந்நிதியான் - | நான்கு | 27 |
| சந்நிதியான் - | ஐந்து | 30 |
| சந்நிதியான் - | ஆறு | 35 |
| சந்நிதியான் - | ஏழு | 39 |
| சந்நிதியான் - | எட்டு | 43 |
| சந்நிதியான் - | ஒன்பது | 47 |
| சந்நிதியான் - | பத்து | 51 |
| சந்நிதியான் - | பதினொன்று | 58 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## சமர்ப்பணம்

எமக்காக மட்டுமன்றி பிறருக்காகவும் வாழ்வதே உண்மையான வாழ்க்கையாகும். இத்தகைய நிலைக்கு அடியேனாகிய என்னை ஆளாக்கிய எனது தாய், தந்தை இருவருக்கும் இந்நூலை காணிக்கையாகச் சமர்ப்பிக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கனடா ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய 2010 ஆம் ஆண்டு வருடாந்த உற்சவத்தில் முருகப்பெருமான் வேலவனாக வீதி உலா வருவதற்கு ஆயத்தமாக உள்ள அருள்காட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

288287

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

தொண்டைமானாறு ஸ்ரீசெல்வச்சந்நிதி ஆலயச் சூழலில் உள்ள சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை ஞானச்சுடர் என்ற சமயச்சஞ்சிகையை 1998ஆம் ஆண்டு தை மாதம் தொடக்கம் மாத வெளியீடாக வெளியீடு செய்து வருகின்றது.

இந்த ஞானச்சுடர் சஞ்சிகையில் சந்நிதியான் என்ற தலைப்பில் கலியுகக் கந்தன் சந்நிதி முருகன் அடியவர்களுக்கு நிகழ்த்தி வருகின்ற அற்புதங்களை சந்நிதியான் கருணையுடன் கட்டுரைகளாக தொடர்ந்து இன்றுவரை அடியேன் வெளியீடு செய்து வருவது அடியார்கள் அறிந்ததே.

ஞானச்சுடர் சஞ்சிகையில் வெளிவந்த ஒரு தொகுதிக் கட்டுரைகள் சந்நிதியான் அற்புதங்கள் பாகம் ஒன்று என்ற தலைப்பில் ஏற்கனவே ஒரு நூலாக எமது பேரவையால் ஆச்சிரமத்தில் வெளியீடு செய்யப்பட்டுள்ளது. தற்பொழுது ஞானச்சுடரில் 2000ஆம் ஆண்டு வெளிவந்த கட்டுரைகளை உள்ளடக்கி சந்நிதியான் அற்புதங்கள் பாகம் இரண்டு என்ற தலைப்பில் இந்நூல் கனடா செல்வச்சந்நிதி ஆலயத்தில் வெளியீடு செய்யப்படுகின்றது.

ஈழத்துமக்கள் குறிப்பாக வடபகுதிமக்கள் ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகனை பரம்பரை பரம்பரையாக வழிபாடு செய்து வருபவர்கள். ஆனாலும் கடந்த இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக நாட்டில் நிலவுகின்ற அசாதாரண சூழ்நிலையால் கடல் கடந்து புலம்பெயர்ந்து வாழ்ந்து வருபவர்கள் மட்டுமன்றி எமது நாட்டிற்குள் உள்ளவர்கள் கூட நினைத்த பொழுதில் சந்நிதியானைச் சென்று வழிபடமுடியாத யுத்த சூழ்நிலைகள் அங்கே நிலவி வருகிறது. இவ்வாறான காலகட்டத்தில் எம்மால் வளியீடு செய்யப்பட்டு வருகின்ற இந்த ஞானச்சுடர் சஞ்சிகையையும் இதில் சந்நிதியான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
288287

என்ற தலைப்பில் அடியேனால் எழுதப்பட்டு வரும் கட்டுரைகளும் இலங்கையிலும் உலகம் முழுவதும் பரந்து வாழும் சந்நிதியானது அடியவர்களை அவனது ஆலயத்திற்கு அழைத்துச் செல்வது போன்ற உணர்வையும் அவனது அருளைப் பெறுவதற்குமான ஒரு மானசீகமான தொடர்பையும் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது எனக் கூறுவதில் தவறு இல்லை எனக் கருதுகிறேன்.

சந்நிதியான் என்ற தலைப்பில் வெளிவருகின்ற இந்தக் கட்டுரைகளை எல்லாம் அடியேன் எழுதுகின்றேன் எனக் கூறுவது பொருத்தமில்லை. எனக்குள் இருந்து செயற்படுகின்ற ஏதோ ஒரு சக்தியின் துணையுடன் தான் இவற்றை எல்லாம் அடியேனால் தொடர்ந்து எழுத முடிகின்றது என்பதை என்னால் நன்கு உணர முடிகின்றது. அடியேனும், அடியேனது துணைவியாரும் மட்டுமல்ல, எமது இருவரது மூதாதையர்களும் சந்நிதி ஆலயத்துடன் நெருக்கமான தொடர்புள்ளவர்களாக வாழ்ந்து வருகின்றனர். உதாரணமாக ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தின் மூலஸ்தானத் தீர்த்தக் கிணற்றினையும் ஆலய வாசற் கதவினையும் எனது தாயாரின் பேரனான வல்வெட்டித்துறை ஆதிகோவிலடியைச் சேர்ந்த வ. முருகுப்பிள்ளை அவர்கள் தனது திருப்பணி உபயமாக அமைக்கும் பேற்றினைப் பெற்றுள்ளார்கள். இவ்வாறு ஏதோ ஒரு பூர்வீக தொடர்பு சந்நிதி ஆலயத்திற்கும் அடியேனுக்கும் உள்ளதை என்னால் உணரமுடிகின்றது.

இக்கட்டுரைகளில் இடம் பெறுகின்ற நிகழ்வுகள் அனைத்தும் சந்நிதியானது உண்மைச்சம்பவங்கள் என்பதால் உணர்வுகளை மிகைப்படுத்தக் கூடிய சொற்களோ வசனங்களோ இங்கே பயன்படுத்தப்படவில்லை. பாமரமக்களும் வாசிக்கக் கூடியதான இலகுவான இயல்பான சொற்பதங்களே பயன் படுத்தப்பட்டுள்ளன.

சந்நிதியானது கட்டுரைகளை தொடர்ந்து எழுதுவதற்கு ஊக்கமளித்துக் கொண்டிருக்கும் வாசகர்களான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடியார்கள் பெருமக்களுக்கும் எனது அன்றாட வாழ்க்கையில் கணிசமான நேரத்தை பயன்படுத்துவதற்கு அனுமதித்து ஒத்துழைப்பு வழங்கிக் கொண்டிருக்கும் எனது குடும்பத்தினருக்கும், கட்டுரைகளை எழுதுவதற்கு ஊக்கம் அளித்துக் கொண்டிருக்கும் ஆச்சிரமத்தின் சுவாமிகளுக்கும் நன்றிகளை தெரிவித்துக் கொள்வது எனது கடமையாகும். இதேபோன்று இந்நூலை கனடா ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் வெளியீடு செய்வதற்கு எல்லாவகையிலும் அனுசரணை வழங்கிய கனடா ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய நிர்வாகத்திற்கும் குறிப்பாக ஆலய பிரதம குருக்கள் பொ. புவனேந்திர ஐயர் அவர்களுக்கும் அழகாகவும் கச்சிதமாகவும் அச்சிட்டு வழங்கிய விவேகா அச்சகத்தினருக்கும் எனது உளப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எமது செயற்பாடுகள் அனைத்திற்கும் துணையாக இருந்து வழிப்படுத்துகின்ற சந்நிதி முருகனே இந்நூலை கனடாவில் வெளியீடு செய்வதற்கும் திருவருள் புரிந்துள்ளான். சந்நிதியானது திருவருள் என்றும் எம் அனைவருக்கும் கிடைப்பதற்கு நாம் அனைவரும் அவனது திருப்பாதங்களைப் பற்றி வணங்குவோமாக.

ஓம்முருகா!

ந. அரியரத்தினம்
பிரதான வீதி
தொண்டைமானாறு
இலங்கை

65 தொன்கிளிப் பார்க்
ரொறன்ரோ, கனடா
416-425-4877
10-08-2010


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

குருபாதம்

இரண்டாவது குருமஹா சந்நிதானம்

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக - நல்லை ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் வழங்கிய**

# அருளாசிச் செய்தி

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால் வெளிவரும் ஞானச்சுடர் மாத சஞ்சிகையின் ஆசிரியராகவும் பாடசாலை அதிபராகவும் பேரவையினுடைய வளர்ச்சிக்கு அயராது தொழில் செய்யும் திரு. ந. அரியரத்தினம் அவர்கள் சந்நிதியான் என்கின்ற தொடர் கட்டுரையை எழுதி வெளியிட்டுக் கொண்டிருப்பது மகிழ்ச்சிக்குரியது. ஈழத்தின் பெருமையை நிலை நாட்டும் பல ஆலயங்களுள் சந்நிதி முருகனுடைய ஆலயம் தனித்துவமானது. உடல்நோய், உளநோய் அனைத்தையும் தீர்க்கும் முருகனாக வேண்டுவோர் வேண்டுவதை ஈயும் இறைவனாக, அன்றும் இன்றும் என்றும் அன்னதான கந்தன் அருள்பாலித்துக் கொண்டிருக்கின்றான். அவனுடைய சிறப்பையும் ஆலய வரலாற்றையும் அறியவேண்டியது அனைவரதும் அவாவாக உள்ளது. அதனை ஈடுசெய்யும் பொருட்டு திரு. ந. அரியரத்தினம் அவர்கள் மிகவும் தெளிவாகவும் அனைவரும் விளங்கிக்கொள்ளும் வகையிலும் இந்நூலை எழுதிக் கொண்டு வருவது எல்லோராலும் வரவேற்கத்தக்கதாகும். அதனுடன் வெளிவந்த சந்நிதியான் வரலாற்றை தனியொரு நூலாக தொகுத்து வெளியிடுவது மேலும் சிறப்பிற்குரியது. ஆசிரியர் அரியரத்தினம் அவர்களின் தொண்டு மேலும் சிறப்படைய வாழ்த்துகின்றோம். நூல் சிறப்பாக வெளிவந்து முருகனுடைய அருள் அனைவருக்கும் கிடைப்பதாக. ஆச்சிரமம் சிறந்து வளர்ச்சியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

நல்லூர்
யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச் செய்தி

## ஆற்றங்கரை வேலழகன் அற்புதங்கள்

ஆசியாவின் முத்தாக விளங்கும் ஈழ மணித்திருநாட்டின் வடகரையில் மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய சிறப்புக்களுடன் ஈழத்தின் அறுபடை வீடுகளில் முதன்மையாக விளங்குவது ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயமாகும்.

பக்தர்களின் பிணி தீர்க்கும் வேலவனாக, அன்னதானக் கந்தனாக, கல்லோடைக்கந்தனாக, காவடிக் கந்தனாக, கந்தசஷ்டி கவசனாக, தமிழ் முருகனாக, பூவரசு மரத்தடியில் இருந்து அருள்புரியும் கருணைக் கடலாம் முருகனின் அற்புதங்களை அடியவர்களுக்கு கட்டுரைகளாக வெளிப்படுத்திக் கொண்டிருக்கும் பணியை திரு. ந. அரியரத்தினம் அவர்கள் நீண்ட காலமாக மேற்கொண்டு வருகின்றார்கள். கொழும்பு, யாழ்ப்பாணம் ஆகிய பல்கலைக்கழகங்களில் சிறப்பான பட்டங்களைப் பெற்று அதிபராகவும், கல்விப் பணிப்பாளராகவும், கல்வித்துறைக்கு சிறந்த சேவையாற்றியது போலவே ஆன்மீகத் துறைக்கும் இவர் நீண்டகாலமாக சேவையாற்றிவருவது பாராட்டப்பட வேண்டிய விடயமாகும்.

சந்நிதி முருகன் அற்புதங்களின் இரண்டாவது தொகுப்பை தற்பொழுது கனடா ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் வெளியீடு செய்வதும் இதனூடாக கிடைக்கும் நிதியை ஆலயத்தின் திருப்பணி வேலைகளுக்கு பயன்படுத்த இருப்பதும் இங்கே இருக்கின்ற எல்லோருக்கும் மகிழ்ச்சி தருவதாக உள்ளது.

கனடா நாட்டிற்கு வந்து புலம் பெயர்ந்து வேலவனின் அற்புதங்களை தொகுத்து வெளியீடு செய்வதன் மூலம் இங்கே உள்ள அடியவர்களும் அவனது பெருமையையும், சிறப்பையும், கருணையையும் மேலும் விளங்கிக் கொள்வதற்கு அவர் செய்யும் சேவை எமக்கு பெருமையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளிக்கின்றது.

எந்நிதியும் தரும் செல்வச்சந்நிதியானின் அருளும் ஆசியும் பொதுப்பணியைச் செய்யும் திரு. ந. அரியரத்தினத்திற்கும் அனைத்து அடியார்களுக்கும் கிடைப்பதற்கு சந்நிதியானை வேண்டுகின்றேன்.

பொன்னுத்துரை ஐயர்
புவனேந்திர ஐயர்.



கொடித்தம்பம் இல்லாது நடைபெறுகின்ற கொடியேற்ற நிகழ்வை வழமைபோல 2010 ஆம் ஆண்டு உற்சவத்தில் கனடா ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் பிரதம குருக்கள் பொ. புவனேந்திர ஐயர் மூலவர் கலசத்தில் சடங்குகளை நடாத்துகின்ற காட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

குருவே துணை

சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகி, அமுதகலாயோகி

திரு. செ. மோகனதாஸ் அவர்கள் வழங்கிய

# அணிந்துரை

எமது சந்நிதியான் ஆச்சிரம பேரவையினால் கடந்த பன்னிரண்டு வருடங்களாக திங்கள் மலராக வெளியீடு செய்து வரும் ஞானச்சுடர் போற்றுதற்குரிய சஞ்சிகையாக வெளிவருவதற்கு சந்நிதி முருகனதும் குருநாதர் மயில்வாகன சுவாமிகளினதும் பேரருளே காரணமாய் அமைந்துள்ளது என்பதனையிட்டு நாம் பெருமகிழ்வு அடைகின்றோம்.

இச் சஞ்சிகையை நாம் 1998ம் ஆண்டு தை மாதம் வெளியீடு செய்யும் பொழுது ஒவ்வொரு மாத சஞ்சிகையிலும் சந்நிதியானது திருவிளையாடல்களை சேர்த்துக் கொள்ளவேண்டும் என்பதையும் அச்சம்பவங்கள் எல்லாம் உண்மையானவையாகவும் இருக்க வேண்டும் என்ற கோட்பாட்டில் உறுதியாக இருந்ததன் பிரகாரம் எங்களுக்கு நேரில் கிடைத்த அனுபவங்கள் மூலமும், பல அன்பர்களுக்கு ஏற்பட்ட முருகனது அருட்காடாட்சத்தையும் நேரில்கண்டும், கேட்டும், ஞானச்சுடர் சஞ்சிகையில் பிரசுரிக்க முயன்றோம்.

இச் செயல்களுக்கு பேருதவியாக எமது பேரவை செயலாளரும், அதிபரும், மலர்க்குழுவில் ஒருவருமாகிய திரு. ந. அரியரத்தினம் சந்நிதியான் என்ற தொடரில் எழுத ஆரம்பித்தார்கள். ஆரம்ப மலரில் இருந்து இதுவரை வந்த சந்நிதியானின் திருவிளையாடல்கள் போற்றுதற்குரிய வகையில் எமது மலரில் இடம்பெற்று வருவதனையிட்டு பல அன்பர்களும், அடியவர்களும் நேரிலும், கடித மூலமும் வாழ்த்துக்கள் தெரிவித்துள்ளார்கள். தொடர்ந்தும் சந்நிதியான் தொடர் வெளிவர வேண்டும் என்றும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டுள்ளார்கள்.

முழுமுதற் கடவுளாய் விளங்கும் சிவபெருமான் அறுபத்திநான்கு திருவிளையாடல்கள் புரிந்தார் என்றும் அதனை இன்றும் நாம் "பெரியபுராணம்" எனும் தொடரின் மூலம் அறியக்கூடியதாவுள்ளது. அதே வகையில் இச்சந்நிதியான் எனும் தொடர் மிகவும் போற்றப்படக்கூடியது.

இந்நூல் எதிர்கால சந்ததியினருக்கும் கடவுள் நம்பிக்கையை வளர்ப்பதற்குரிய அரிய பொக்கிஷமாக விளங்கும் என்பது திண்ணம். இத்தொடரை எழுதும் திரு. ந. அரியரத்தினம் அவர்கள், எல்லா நலமும் பெற்றுவாழ சந்நிதி வேலவனை வேண்டி விடை பெறுகின்றோம்

**சுபம் சாந்தி**



சந்நிதியின் சித்தர் பரம்பரையினர் இடமிருந்து வலமாக
ஆச்சிரமத்து மயில்வாகனம் சுவாமிகளின் சீடர்,
சோல்பரி பிரபுவின் மகன் ஆனைக்குட்டிச் சுவாமிகள்,
பன்றிக்குட்டிச் சுவாமிகள் (இந்தியா),
சுவாமி கௌரிபாலா (ஜேர்மன் சுவாமி)-1960



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

டாக்டர் சி. எஸ். எஸ். மகேந்திரா அவர்கள் வழங்கிய

# வாழ்த்துரை

கலியுகத் தெய்வம் கந்தனின் அருள் அளப்பிடற்கரியது. செல்வச்சந்நிதி முருகனின் அற்புதங்கள் கணக்கிலடங்கா. அவற்றை கட்டுரைகளாக மாதம் தோறும் வெளியிட்டு வருவதுடன் தொகுத்து நூலாக வழங்கும் திரு. ந. அரியரத்தினம் அவர்களின் சேவை பாராட்டப்பட வேண்டிய தெய்வீக சேவையாகும். இத்தொண்டு மேலும் மேலும் வளர முருகனருளை வேண்டுகின்றேன்.

12-08-2010

13945 cc



தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் வேல் வடிவில் அமர்ந்திருக்கும் மூலஸ்தான முருகனுக்கு வழமையான ஆலய மரபிற்கிணங்க வாய் கட்டிய நிலையில் பிரதம பூசகர் ஆ. சிவசண்முக ஐயரினால் பஞ்சாலாத்தி எடுக்கப்படும் அருள் நிறைந்த காட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரும பீடத்திற்கு வருகைதந்த கந்தசாமி ஐயர் உலககுருநாத ஐயர் அங்கேவேலையில் மூழ்கியிருந்த திரு.வி.அரியராசா அவர்களிடம் **"முடிச்சுக்கள் போடப்பட்ட நூற்கட்டுக்களைத் தாருங்கள் அண்ணே"** என்று கேட்கின்றார்கள். அரியராசா அவர்களும் அங்கே தயாராக இருந்த நூற்கட்டுக்களை எடுத்து ஐயரிடம் கொடுக்க ஐயர் நூற் கட்டுக்களை கையில் வாங்கிக் கொண்டே அண்ணே, நாளைக்கு இன்னும் கூட நூல் தேவைப்படும் நூல் வேலையைத் தொடர்ந்து செய்யுங்கோ என்று கூறியபடி மூலஸ்தானத்தை நோக்கி நடந்து செல்லுகின்றார்கள்.

அப்பொழுது திரு. வி. அரியராசா அவர்கள் கரும பீடத்தில் தனக்குப் பக்கத்திற் கடமையாற்றிக் கொண்டிருந்த அடியே னையும், திரு. வ. திருநாவுக்கரசு அவர்களையும் பார்த்து இந்த வருடமும் வழமை போல அடியார்கள் கூட்டம் வந்து கொண்டிருந்தாலும் வழமைக்கு மாறாக நூல் செலவழிகின்ற வேகம் கூடுதலாகத்தான் இருக்கிறது என்று தனது மனக் கருத்தை எடுத்துக் கூறினாாகள்.

அதற்குத் திரு. வ. திருநாவுக்கரசு அவர்கள் ஓம்! ஓம்! வருகின்ற அடியார்கள் இங்கே வந்து தாம் முருகப்பாவுடைய நூலைக் கட்டுவதுடன் மேலும் 5நூல், 10நூல் என்று கேட்டும் எல்லே வாங்கிச் செல்கின்றார்கள், என்று கூறியதுடன் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுகின்ற சிங்கள அன்பர்கள் கூட இப்பொழுது எங்களை விடவும் பயபக்தியோடையும், நம்பிக்கையோடையும் சந்நிதியானுடைய நூலைக் கட்டுவதையும் நாங்கள் கணக்கில் எடுக்கத்தானே வேண்டும்..... என்று யதார்த்த நிலமையை எடுத்துக் கூறினார்கள்.

ஆம்! மேற்படி உரையாடல்கள் இந்த வருட உற்சவத்தின் பொழுது (2000ஆம் ஆண்டு) உற்சவம் முடிவடைவதற்கு இன்னும் இரண்டு நாட்கள் இருந்த வேளையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயத்தின் வடக்குத் திசையில் மடைப்பள்ளியுடன் இணைந்து காணப்படுகின்ற அர்ச்சனைக்குரிய பற்றுச் சீட்டுக்கள் விற்கப்படும் கருமபீடத்தில் இடம்பெற்ற உரையாடல்களாகும்.

உலககுருநாத ஐயர் இந்த வருட உற்சவத்தின் உரிமையாளராகவும், ஆலயத்தின் பிரதம குருக்களில் ஒருவராகவும் செயற்பட்டுக் கொண்டிருந்தார்கள். திரு.வி. அரியராசா, திரு. வ. திருநாவுக்கரசு ஆகிய இருவரும் ஓய்வுபெற்ற அரச ஊழியர்கள் அத்துடன் ஐயருடைய தூரத்து உறவினர்கள் வழமையாக உற்சவ காலத்தில் இது போன்ற தொண்டுகளில் ஈடுபடுகின்ற அன்பர்கள்.

மேற்படி உரையாடல்கள் இடம் பெற்றுக்கொண்டிருந்த பகல் நேரத்திருவிழாவின் போது சுவாமி வெளிவீதிக்கு வருவதற்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்த நேரமாகையால் அர்ச்சனைக்குரிய பற்றுச் சீட்டுக்கள் வழங்கப்படும் கரும பீடத்திற்கு அடியார்கள் வந்த வண்ணமே இருந்தார்கள்.

அந்தச் சந்தர்ப்பத்தில் தான் இந்த அற்புத நிகழ்வு அங்கே நடந்தேறியது. அப்பொழுது மடைப்பள்ளிக்குள் பல்வேறு கடமைகளில் ஈடுபட்டுக் கொண்டிருப்பவரும், சந்நிதியானே தஞ்சமென ஆலயச் சூழலிலேயே நீண்ட காலத்தைக் கழித்து வருபவருமான சித்திரவடிவேல் என்ற அன்பர் நாம் கடமையாற்றிக்கொண்டிருந்த கரும் பீடத்திற்கு வருகை தந்தார்கள். வந்தவர் ஒரு எழுமிச்சம் பழத்தைக் கருமபீடத்தில் கடமையாற்றிக் கொண்டிருந்த எம்மிடம் தந்து **"இதை இங்கே வையுங்கள்"** என்று கூறுகின்றார். கருமபீடத்தில் உள்ள நாம் யோசித்தோம். எலுமிச்சம் பழத்தை இவர் ஏன் எங்களிடம் கொண்டுவந்து தரவேண்டுமென்று எங்களுக்கு எதுவும் விளங்கவில்லை. இறுதியில் நாம் இதை இங்கே ஏன் தருகின்றீர்கள் இது எவ்வாறு கிடைத்தது என்று சித்திரவடிவேலிடமே கேட்டோம். அதற்கு அவர் **இது அங்கே கிடைத்தது** உள்ளே வையுங்கள் என்று கூறிக்கொண்டே கரும பீடத்தில் உள்ள எம்மிடம் அதனைக் தந்து விட்டு அவசர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவசரமாக அங்கிருந்து சென்றுவிட்டார். கரும பீடத்திலுள்ள நாங்களும் சரி ஏதோ தருகின்றார் மறுக்க வேண்டாம் வாங்குவோமென நினைத்து அதனை வாங்கி வைத்து விட்டோம். நேரம் பகல் 10:00மணியைத் தாண்டி விட்டது. அடியார்கள் கூட்டம் அலைமோதிக் கொண்டிருக்கிறது.
வழமை போலக் கருமபீடத்திற் பற்றுச் சீட்டுப் பெறுவதற்கு அடியார்கள் வந்த வண்ணமேயிருந்தனர். அப்படி கரும பீடத்திற்கு வந்தவர்களில் ஒரு அன்பர் அங்கே தயக்கத்துடன் எம்மிடம் வந்து அர்ச்சனைக்குரிய பற்றுச்சீட்டுப் பெறுவதற்குப் பதிலாக ஐயா! இங்கே தேசிக்காய் வாங்கலாமா? என்று கேட்கின்றார். அப்பொழுது அங்கே நாம் சுறுசுறுப்பாகக் கடமையாற்றிக் கொண்டிருந்தோம். இங்கே நாங்கள் தேசிக்காய் விற்பதில்லை வெளியே அர்ச்சனைப் பொருட்கள் விற்பனை செய்கின்ற கடைகள் இருக்கின்றன அங்கேதான் தேசிக்காய் வாங்கலாம் அங்கே சென்று கேட்டுப் பாருங்கள் என்று அவருக்கு பதில் அளித்தோம்.

அதற்கு அந்த அன்பர் ஓம் ஐயா நீங்கள் சொல்வது போல இங்கே வெளியில் எல்லாக் கடைகளிலும் நான் கேட்டுவிட்டேன் எங்குமே வாங்க முடியவில்லை. ஒரு நேர்த்திக்கடனை நிறைவேற்றுவதற்காக வந்துள்ளோம் தேசிக்காய் கட்டாயம் தேவை அதுதான் உங்களிடம் ஒருமுறை கேட்டுப்பார்ப்போம் என்று எனக்கு தோன்றியதால்தான் வந்தனான் என்று தன்னுடைய நிலைமையை வெளிப்படையாகவும் வஞ்சகமில்லாமலும் எம்மிடம் எடுத்துக் கூறினார்.

கருமபீடத்திற் கடமையாற்றிக் கொண்டிருந்த நாம் ஒருவரை ஒருவர் மௌனமாகப் பார்த்துக் கொண்டோம் எங்களுக்கு விடயம் புரியத்தொடங்கி விட்டது. இப்பொழுது நடந்து கொண்டிருப்பது சாதாரண நிகழ்வு அல்ல இது எமது அறிவிற்கும் ஆற்றலுக்கும் அப்பாற்பட்ட விடயம். ஆம்! இது சந்நிதியானுடைய திருவிளையாடல்தான் என்பதை நன்கு உணர்ந்து கொண்டோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தச் சந்தர்ப்பத்தில் திரும்பிப்போக ஆயத்தமாகிக் கொண்டிருந்த அந்த அன்பரிடம் ஐயா நில்லுங்கள் எனக்கூறி ஒரு தேசிக்காய் இங்கே இருக்கிறது எனக்கூறி அதனை அவரிடம் வழங்கினோம். அதற்கு அந்த அன்பர் எவ்வளவு பணம் என்று எம்மிடம் கேட்டு அதற்குரிய பணத்தை வழங்க முன்வந்தார். அதற்குக் கருமபீடத்திலுள்ள நாம் பணம் எதனையும் பெற்றுக்கொண்டு இங்கே நாங்கள் தேசிக்காய் விற்பதில்லை எனக்கூறி நேர்த்திக் கடனை நிறைவேற்றுவதற்காகவே இதனை வழங்குகின்றோம் என பணிவுடன் பதிலளித்தோம். அப்பொழுது அந்த அன்பர் அளவு கடந்த திருப்தியுடன் கருமபீடத்திலுள்ள எங்களுக்கு நன்றி கூறிவிட்டு அவசர அவசரமாகத் தமது நேர்த்தியை நிறைவேற்ற வேண்டுமென்ற வேகத்தில் அங்கிருந்து அகன்று சென்றார்கள்.

நடந்து முடிந்த நிகழ்வைக் கருமபீடத்தில் இருந்த அனைத்து அன்பர்களும் தமக்குள்ளே எடைபோட்டுப் பார்க்கின்றனர். நேர்த்திக்கடனை நிறைவேற்ற வந்த ஒரு மெய்யடியாருக்காகச் சந்நிதியான் மேற்கொண்ட திருவிளையாடலை நினைத்து உள்ளம் உருகத் தொடங்கினர்.

பொதுவாகத் தேசிக்காயைக் கருமபீடத்திற்கு யாரும் கொண்டு வந்து தருவதில்லை என்றே கூறலாம். அதே போல அர்ச்சனைக்குரிய பற்றுச்சீட்டு விற்கின்ற கருமபீடத்திற்கு வந்து யாரும் தேசிக்காயைக் கேட்பதுமில்லை. நிலைமை இவ்வாறு இருக்க ஒரே நாளில் சில நிமிட நேர இடைவெளியில் கருமபீடத்திற்குத் தேசிக்காய் வந்து சேர்ந்த முறையும் அதனை நாடி வந்தவர் வெளிப்படுத்திய கருத்துக்களும் இறுதியில் அவருக்கே அது கையளிக்கப்பட்டதும் விந்தையிலும் விந்தையல்லவா? கலியுகக் கந்தன் சந்நிதி முருகனது திருவிளையாடல்களை நாம் வார்த்தைகளால் கூறத்தான் முடியுமா?

இந்தச் சம்பவத்தை தொடர்ந்து மீண்டும் தேசிக்காயைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

288287

பெற்றுக்கொண்ட அன்பரைச் சந்திக்க வாய்ப்பு ஏற்படவில்லை. ஆனால் சில நாட்களின்பின் தேசிக்காயை வழங்கிய சித்திரவடிவேலுவை அடியேன் சந்தித்தேன். நடந்து முடிந்த நிகழ்வை அவருக்குக் கூறி தேசிக்காய் அவருக்கு எவ்வாறு கிடைத்தது என்பதை அறிய முற்பட்டபொழுது **"இதெல்லாம் அவருடைய செயல்"** என்று மட்டும் கூறிவிட்டு வழமையான தனது வேலையில் ஈடுபடத் தொடங்கிவிட்டார்.

உற்சவக் காலங்களில் சந்நிதி ஆலயம், பக்தர்கள் கூட்டம் மிகப்பெரிய அளவிற் கூடுகின்ற இடமாக இருந்தாலும் அந்த நெருக்கடிகள் மத்தியிலும் பல்வேறு வகையான நேர்த்திக்கடன்களை நிறைவேற்றுவதற்காக அடியார்கள் வருடாவருடம் அங்கே அதிக அளவில் கூடுகின்றனர்.

இவ்வாறு பக்தர்கள் தங்கள் நேர்த்திக்கடன்களை நிறைவேற்ற முயற்சிக்கும் பொழுது ஏற்படுகின்ற தடங்கல்கள், சிக்கல்களின் பொழுது அங்கே சந்நிதியான் தோன்றாத் துணையாக இருந்து அவற்றை நிறைவேற்றி வைப்பதற்கு உதவி வருகின்றார் என்பதை நாம் பலபேர் வாயிலாக அறிந்திருக்கின்றோம். அதனால் அதனைச் சந்நிதியான் எப்படி, எவ்வாறு நிறைவேற்றி வைக்கின்றான் என்ற அற்புதத்தை மேற்படி சம்பவத்தின் மூலம் நாம் நேரடியாகவே உணர்ந்து கொண்டோம்.

மெய்யடியார்கள் மீது சந்நிதியான் கொண்டிருக்கின்ற அன்பிற்கும் அருளிற்கும் எல்லைதான் உண்டோ!

ஓம் முருகா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சந்நிதியான் - இரண்டு

1982 - ஆம் ஆண்டு சந்நிதி உற்சவம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தீர்த்தத் திருவிழாவிற்கு இன்னும் ஆறு நாட்கள் இருக்கின்றன. சந்நிதி உற்சவம் தொடங்கிவிட்டால் சந்நிதியுடன் தொடர்புடைய அன்பர்கள் சந்நிதி உற்சவத்திற்குச் செல்வது பற்றியும் அங்கே நிறைவேற்ற வேண்டிய நேர்த்திக்கடன்கள் பற்றியும் சிந்திப்பதும் மற்றவர்களுடன் பரஸ்பரம் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வதும் வழமையான விடயங்களாகும்.

இது போன்ற ஒரு உரையாடல் பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபராக அப்பொழுது கடமையாற்றிக் கொண்டிருந்த திரு. வேலும்மயிலும் ஐயாவுக்கும் (தற்பொழுது திருகோணமலைப் பட்டணமும் சூழலும் பிரதேச செயலர்) பருத்தித்துறை கிழக்கில் நாகர் கோவில் வடக்குக் கிராமத்தைச் சேர்ந்த சம்மாட்டியார்களான திரு. மா. சாம்பசிவம், திரு. சின்னத்தம்பி ஆகியோருக்குமிடையில் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றுக் கொண்டிருக்கிறது. திரு. வேலும்மயிலும் அவர்கள் பழகுவதற்கு மிகவும் இனிமையானவர் மக்கள் சேவையே மகேசன்சேவை என்னும் கருத்தை வாழ்க்கையிற் கடைப்பிடித்து வருகின்ற ஒரு உன்னதமான சேவையாளர். உயர்ந்த பதவி வகித்தாலும் பாமரமக்களுடன் அன்னியோன்னியமாக பழகுகின்ற பண்புள்ளவர். சந்நிதி உற்சவமும், நாகர் கோவில் நாகதம்பிரான் உற்சவமும் பருத்தித்துறை பிரதேச செயலரின் பொறுப்பில் நடக்கும் உற்சவங்களாகும். இந்தவகையில் திரு. வேலும்மயிலும் அவர்கள் சந்நிதியானுடைய உற்சவம் தொடர்பாக மட்டுமன்றித் தனது பகுதிக்குள் அடங்கும் தான் பொறுப்பாகச் செயற்படுத்தும் இன்னொரு ஆலயமான நாகர் கோயிலில் எதிர்கொள்ளப்போகும் உற்சவம் தொடர்பாகவும் அவர்களுடன் சில கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டிருந்தார். அப்பொழுது அந்த உரையாடலில் சம்மாட்டியார்கள் இருவரும் தாங்கள் வருடாவருடம் சந்நிதியானிடம் செல்வது பற்றியும் உற்சவத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதிநாளான தீர்த்தத் திருவிழாவிற்கு இருவரும் சென்று அன்னதானம் வழங்கி வருகின்ற பணியை நீண்டகாலமாகச் செயற்படுத்தி வருவது பற்றியும் திரு. வேலும்மயிலும் ஐயா அவர்களுக்கு எடுத்துக்கூறிக் கொண்டிருந்தனர்.

மேற்படி உரையாடலின் நடுவே திரு. மா. சாம்பசிவம் சம்மாட்டியார் அவர்கள் தனது தொழில் தொடர்பான வேலைப்பளுக்கள் காரணமாகத் தான் வருடா வருடம் செல்வது போல இந்த வருடம் சந்நிதியானிடம் வந்து அன்னதானப் பணியை நிறைவேற்ற முடியாத நிலமையை தனது உறவினரும் சக சம்மாட்டியுமான திரு. சின்னத்தம்பி சம்மாட்டியார் அவர்களுக்கு அச்சந்தர்ப்பத்தில் எடுத்துக்கூறி அந்நற் கடமையைத் தனக்காகத் திரு. சின்னத்தம்பி சம்மாட்டியார் அவர்களையே நிறைவேற்றுமாறு கேட்டுக்கொண்டார்.

இந்த உரையாடல் நடைபெற்ற அன்று இரவு சந்நிதி முருகன் திருமதி சாம்பசிவம் அவர்களுக்குக் கனவிலே தோன்றி தனது அழகிய திருக்கோலத்தில் காட்சி கொடுக்கின்றார். இவ்வாறு தனக்கு கனவிலே சந்நிதி முருகன் காட்சி தந்ததைத் தனது கணவனுக்குத் திருமதி சாம்பசிவம் அவர்கள் பயபக்தியுடன் எடுத்துக் கூறினார்கள். திரு. சாம்பசிவம் அவர்கள் தனது மனைவியுடன் உரிமையுடனும் திறந்த சிந்தனையுடனும், அதேநேரம் நகைச்சுவையுடனும் பேசுகின்ற இயல்புள்ளவர். தனக்குக் கனவிலே சந்நிதியான் காட்சி கொடுத்தார் என்று தனது மனைவி கூறியதைக்கேட்ட திரு. சாம்பசிவம் அவர்கள் தான் எதிர்நோக்கிக் கொண்டிருந்த தனது வேலை தொடர்பான நெருக்கடிகளினால் அதனை ஒரு பெரிய விடயமாக கருதாது “முருகன் கனவிலே வந்தவரோ அப்ப நீபோய் முருகனையே கல்யாணம் செய்:” என்று நகைச்சுவையுடன் பதில் கூறிவிட்டுத் தனது வேலையில் மூழ்கிப்போய்விட்டார்.

திருமதி. சாம்பசிவம் அவர்கள் மிகவும் அடக்கமான சுபாவம் உள்ளவர். அதுமட்டுமல்ல, தனது கணவனது வார்த்தைக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர் வார்த்தை பேசாத இயல்புள்ளவராகையால் தனது கணவன் இவ்வாறு சொல்லியதற்கு எதுவித பதிலும் கூறாது பதிலுக்கு தானும் சிரித்து விட்டுத் தனது அன்றாட வேலையில் ஈடுபடத் தொடங்கினார். ஆனாலும் சந்நிதியான் கனவிலே காட்சி தந்ததை நினைத்த பொழுது உள்ளத்தில் ஆனந்த பரவசம் ஏற்பட்டுக் கொண்டிருந்தது. அதேவேளை சந்நிதியான்மீது ஆழமான பக்தியுணர்வு கொண்டவரான கணவர் தான் கனவில் கண்ட காட்சியை ஒரு பொருட்டாக மதியாதிருந்தது அவருக்கு வருத்தமாகவேயிருந்தது.

திரு. சாம்பசிவம் அவர்களும் அவரது மனைவியும் சந்நிதி ஆலயத்தின் வெளிவாசலின் அருகே திருப்பணி உண்டியல் அமைந்திருக்கும் இடத்திற்கு அருகில் அதன் தெற்குப்பக்கமாக அமர்ந்திருக்கின்றனர். அப்பொழுது சந்நிதியான் மூலஸ்தானத்திலிருந்து வெளிப்பட்டுப் பாலமுருகனாகத் திரு. திருமதி. சாம்பசிவம் தம்பதிகளை நோக்கி நடந்து வருகின்றார் அருள் ததும்பும் சிரித்த முகத்துடன் ஒருகையில் வேலுடன் பாலமுருகனாக வந்து கொண்டிருந்த சந்நிதி முருகன் சந்நிதியில் அமைந்துள்ள நந்தியுடன் கால்தடக்கி சிறிது நிலை தடுமாறி பின்பு தன்னைச் சுதாகரித்துக் கொண்டு வெளியே வந்துகொண்டிருந்தார். பாலமுருகனாக வருகை தந்த சந்நிதி முருகன் திரு. சாம்பசிவம் அவர்களுக்கு அருகே வந்து அவரது மடியில் பக்குவமாக அமர்ந்து கொண்டார். "பின்பு கையில் இருந்த வேலினால் திரு. சாம்பசிவத்தின் நாடியை மெதுவாகத்தட்டி அவரை நோக்கி **என்னை நீ நம்பவில்லையா? என்னை நம்பு உனக்கு எல்லா விடயமும் நல்லபடியே நடக்கும்** என்று மழலை மொழிகளால் கூறிவிட்டு மீண்டும் மூலஸ்தானத்தை நோக்கி உள்ளே நடந்து சென்று கொண்டிருந்தார்."

அளவில்லாத ஆனந்தத்தினாலும் எல்லையில்லாத உணர்ச்சியினாலும் உந்தப்பட்ட திரு. சாம்பசிவம் அவர்கள் துடிதுடித்து எழும்புகின்றார். ஆம்! அப்பொழுதுதான் தெரிகின்றது தான் கண்டது கனவென்று.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடிந்தபின் தன் மனைவியிடம் திரு. சாம்பசிவம் கனவிலே தான் கண்ட அருள் ததும்பும் அற்புதமான காட்சியை கூறியது மட்டுமன்றி முதல் நாள் தன் மனைவி கண்ட கனவினைப் பொருட்படுத்தாது தான் அலட்சியமாக நடந்து கொண்டதற்காக அவரிடம் வருத்தமும் தெரிவித்துக்கொண்டார்.

அதுமட்டுமன்றித் திரு. சாம்பசிவம் அவர்கள் தனது ஏனைய வேலைகள் எல்லாவற்றையும் ஒரு புறத்தில் ஒதுக்கி வைத்துவிட்டு முதல் முக்கிய கடமையாக வழமைபோலச் சந்நிதியானுடைய தீர்த்த உற்சவத்திற்குச் சென்று அன்னதானம் வழங்குகின்ற செயற்பாட்டை நிறைவேற்றி முடிக்கின்ற ஆயத்தங்களை உடனடியாக செய்ய முற்பட்டார். ஆம்! வழமை போல தீர்த்தத் திருவிழாவிற்கு தானே நேரில் சென்று அன்னதானச் செயற்பாட்டையும் செய்து முடித்தார்கள்.

அடியார்கள் ஒருமுறை நினைத்தால் சந்நிதியான் ஓராயிரம் முறை அவர்களை நினைத்து அவர்கள் மீது அருள் செலுத்துகின்ற அற்புதத் தெய்வமல்லவா அதுமட்டுமன்றித் தன்மீது பக்தி கொண்டு சந்நிதியில் வந்து நிறைவேற்றுகின்ற கைங்கரியங்களை வேறு தேவைகளுக்காக அல்லது வேறு காரணங்களுக்காக அந்த அடியார்கள் அவற்றை அசட்டை செய்தாலோ, அல்லது பின்போட்டாலோ உரிமையுள்ள உறவினர் ஒருவர் அல்லது நண்பர் ஒருவர் சுட்டிக்காட்டி அல்லது தட்டிக்கேட்டு மற்றவரைத் திருத்துவது போல சந்நிதியானும் தனது பக்தர்களுக்கு ஒரு படிப்பினையை ஏற்படுத்தி என்றும் அவர்களைத் தனது பக்தர்களாக வைத்திருக்கும் இயல்புள்ள அற்புதத்தெய்வம் என்பதை அனுபவிப்பவர்கள் அன்றோ அறிவார்கள்.

ஓம் முருகா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சந்நிதியான் - மூன்று

திரு. சாம்பசிவம் அவர்களின் பிறந்த இடம் வல்வெட்டித்துறையாக இருந்தாலும் அவர் புகுந்து வாழ்ந்து கொண்டிருக்கின்ற கிராமம் நாகர் கோவிற் கிராமமாகும். வடமராட்சி கிழக்கு என்று அழைக்கப்படும் பருத்தித்துறை கிழக்குப் பகுதியில் பல கிராமங்கள் தனிக் கிராமங்களாக அமைந்துள்ளன. அதுமட்டுமன்றி இக் கிராமங்கள் ஒவ்வொன்றும் தனித்துவமான சில இயல்புகளைக் கொண்டவையாகவும் காணப்படுகின்றன.

நாகர் கோவிற் கிராமம் வரலாற்றுப் புகழ்மிக்க நாகதம்பிரான் ஆலயத்தைக் கொண்டிருப்பது எல்லோரும் அறிந்த விடயம் ஆனால் அந்த தனிக்கிராமத்தில் சிறியதும் பெரியதுமாக மேலும் 30 க்கும் மேற்பட்ட ஆலயங்கள் அமைந்திருப்பது உண்மையிலேயே ஆச்சரியப்படும் விடயமாகும். இவ்வாறு ஒரு தனிக்கிராமத்தில் இவ்வளவு தொகையான ஆலயங்கள் காணப்படுகின்ற இயல்பு எங்குமே காணமுடியாத பண்பு என்றே கூறலாம்.

நாகர் கோவில் வடக்கில் அமைந்துள்ள மேற்படி நாகர் கோவிற்கிராமம் கடற்கரைக் கிராமமாகும். இது முற்றும் முழுதாக ஒரு கடற்றொழிற் கிராமமாக விளங்குகின்றது. இங்கே கரைவலை இழுக்கும் பொழுது களைப்புத்தெரியாமல் இருப்பதற்காக இவர்கள் பாடுகின்ற நாட்டார் பாடல்கள் நகைச்சுவை பொருந்தியதாகவும் தனித்துவமான மெட்டுடன் தெவிட்டாத சுவையுடையதாகவும் அமைந்திருப்பதும் தனிச்சிறப்பாகவே கூறவேண்டும்.

இந்த கிராமத்து மக்கள் தைப்பொங்கல் முடிந்து புதிய வருடத்தில் தமது கடற்றொழிலை எல்லா மக்களும் ஒன்று சேர்ந்து ஒரு குறிப்பிட்ட நாளே ஆரம்பிப்பார்கள். அவ்வாறு எல்லோரும் தொழிலை ஒற்றுமையாக ஆரம்பிக்கும் நாளை "நாள் வலை இழுத்தல்" என்ற பெயருடன் ஒரு விழாவாக கொண்டாடிவரும் வழக்கத்தை இன்றுவரை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேணிவருகின்றனர். இந்த வருடம் 26-01-2000 இல் அந்த நிகழ்வு இடம் பெற்றது.

நாள் வலை இழுத்தல் என்ற நிகழ்வை மங்களகரமாகவும் மகிழ்ச்சியாகவும் ஊர் முழுவதும் ஒன்றிணைந்து கொண்டாடுவதைப் பார்ப்பது உண்மையில் கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும் அதே நேரம் நாள் வலை இழுக்கும் பொழுது நடந்தேறும் கருமங்கள் யாவும் திருப்தியாகவும், சிறப்பாகவும், நடந்தேறுவதில் இந்த கிராம மக்கள் மிகவும் கவனமாக இருப்பார்கள். ஏனென்றால் அந்த வருடம் முழுவதும் அவர்கள் தமது தொழிலைச் செய்யும் பொழுது சிறந்த முறையில் தொழில் நடை பெற்று உயர்ந்த வருமானத்தை பெறுவதற்கும் எதிர்பாராத ஆபத்துக்கள் மற்றும் இழப்புக்களைத் தவிர்த்தல் போன்றவற்றிற்கும் இந்த **"நாள் வலை இழுத்தல்"** என்ற புதிய வருடத்தின் முதல் நாள் தொழில் செய்யும் செயற்பாடு ஒரு கட்டியம் கூறும் நிகழ்வாக அமைந்திருக்கும்.

நாள் வலை இழுப்பது தொடர்பான தீர்மானங்களை கரைவலைச் சம்மாட்டியார்கள் நாகதம்பிரான் ஆலயத்தில் ஒன்று கூடித்தீர்மானிப்பார்கள். நாள் வலை இழுத்தற் செயற்பாட்டை எந்தச்சம்மாட்டியார் தலைமை தாங்கிச் செயற்படுத்துவது என்பதைத் திருவுளச்சீட்டின் மூலம் தெரிவு செய்வர்.

இவ்வாறு திருவுளச்சீட்டில் பெயர்கள் போடப்படும் பொழுது அதற்குள் உள்ளடங்குகின்ற சம்மாட்டியார்களில் திரு. சாம்பசிவம் அவர்களும் ஒருவராக இடம்பெறுவது வழக்கம்.
இவர் தனது நன்மையை மட்டுமல்லாது ஊர்மக்களது நன்மை அவர்களது உயர்வு என்பவற்றிலும் அக்கறை கொண்டு செயற்படுகின்ற இயல்புள்ளவர்.

சுமார் பத்து வருடங்களுக்கு முன்பு திரு. சாம்பசிவம் அவர்களே நாள்வலை இழுப்புக்கு தலைவராகத் தெரிவு செய்யப்பட்டிருந்தார். அந்த வருடத்திற்குரிய நாள் வலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இழுக்கும் நிகழ்வு நெருங்கிக் கொண்டிருந்தது. எந்த தினத்தை நாள் வலை இழுத்தலுக்கு தெரிவு செய்தால் அது சிறப்பாக அமையும் அதனால் கிராமம் நன்மையடையும் என்பவற்றைப்பற்றி தனக்குள் சிந்தித்து சரியான திகதியை எடுக்கமுடியாது மனதில் பெரும் ஆதங்கப்பட்டவராக திரு. சாம்பசிவம் அவர்கள் காணப்பட்டார்கள். இறுதியில் சந்நிதியானே நீயே துணை அப்பா என்று நினைத்த வண்ணம் நித்திரைக்குச் சென்று விட்டார்கள்.

திரு. மா. சாம்பசிவம் அவர்கள் சந்நிதியானின் உள்மண்டபத்தின் மூலவர் வாசலின் தெற்குப்பக்கமாக நின்று அவரை வழிப்பட்டுக் கொண்டிருக்கிறார். அப்பொழுது வாய்கட்டிய நிலையில் கையில் திருநீற்றுத்தட்டுடன் காணப்பட்ட ஆலயத்தின் பிரதம பூசகர் அவர்கள் திரு. சாம்பசிவம் அவர்களுக்குக்கிட்ட வந்து தனது கைகளினால் சைகைகள் மூலம் நாள், நட்சத்திரம் எதுவும் பார்க்கத்தேவையில்லை என்று கூறி சந்நிதியானுடைய மூலஸ்தானத்தைச் சுட்டிக்காட்டி அவரை நினைத்துக்கொண்டு காரியத்தை ஆரம்பிக்குமாறும் வாக்குக் கொடுத்தார்.

ஆம்! ஆதங்கத்துடன் நித்திரைக்குச் சென்ற திரு. சாம்பசிவம் அவர்களுக்கு அன்று இரவு கனவில் சந்நிதியான் எவ்வாறு செயற்பட வேண்டுமென வழிகாட்டிவிட்டார். இதனால் மனதில் தெளிவும், நம்பிக்கையும், உற்சாகமும் மேலிட்டவராக திரு. சாம்பசிவம அவர்கள் நாள், நட்சத்திரம் எதுவும் பார்க்காது குறிப்பிட்ட ஒரு நாளை வலைக்காகத் தெரிவு செய்தார்கள். நாள்வலை உட்பட அந்த வருடத்தினுடைய அனைத்துச் செயற்பாடுகளும் நிறைவாகவே நடந்தேறியது.

இவ்வாறு தனது அடியவனான திரு. சாம்பசிவம் அவர்களது வாழ்க்கைப் பயணத்தை சந்நிதியான் கனவுகள், காட்சிகள் மூலம் அவ்வப்பொழுது வழிப்படுத்துவதனால் அவரது பல கருமங்களும் சிறப்பாக நடந்தே வருகிறது. அதுமட்டுமன்றி சந்நிதியான் வாக்களித்ததற்கிணங்க அவரது குடும்பத்திற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்பட்டுவருகின்ற மிகப்பெரிய ஆபத்துக்களிலிருந்தும் அவர்கள் காப்பாற்றப்பட்டு வருவதையும் காணமுடிகிறது. 22-09-1995 இல் நாகர் கோவில் மகாவித்தியாலயத்தில் இடம்பெற்ற துன்பகரமான விமான குண்டுவீச்சும் அதனால் ஏற்பட்ட அனர்த்தங்களும் 28 பாடசாலை மாணவர்களின் உயிர் இழப்புக்களும் நாங்கள் அறிந்ததே. அந்த குண்டுவீச்சில் இவரது மகளும் சிக்கி மிகமோசமான காயத்திற்குள்ளாக நேர்ந்தது. ஆனாலும் தெய்வாதீனமாக காயமேற்பட்ட இடங்கள் ஆபத்தற்ற இடங்களாக இருந்த காரணத்தால் நீண்டகால தீவிர சிகிச்சையின் பின் அவரது மகளின் உயிரைக்காப்பாற்ற முடிந்தது.

திரு. சாம்பசிவம் அவர்கள் கதிர்காமயாத்திரை சென்று அண்மையில் அவரது கிராமத்திற்கு திரும்பியிருந்தார். அவரது மனைவி கதிர்காமயாத்திரைக்குச் செல்ல முடியாத நிலையில் நோய்வாய்ப்பட்டிருந்தமையால் சந்நிதியானிடம் வந்து கற்பூரச்சட்டி எடுத்து தனது நேர்த்திக்கடனை சந்நிதியில் நிறைவேற்றி முடித்திருந்தார்கள். இவ்வாறு திரு. சாம்பசிவம் குடும்பத்தினர் 04-12-1999 திகதியில் சந்நிதியானிடம் தமது நேர்த்திக் கடனை நிறைவேற்ற வந்த சந்தர்ப்பத்திலேயே மேற்படி அற்புத அனுபவங்களை எம்மிடம் தெரிவித்தனர்.

உள்ளம் ஒரு கோயில் என்பதற்கிணங்க யார்யார் சந்நிதியானை தங்கள் உள்ளத்தில் வைத்து பூசைசெய்கின்றார்களோ அவர்களுக்கெல்லாம் அவர்களது வாழ்க்கைப் பயணத்தில் தோன்றாத் துணையாக இருந்து வழி காட்டிவருகின்ற கருணைத்தெய்வமாக சந்நிதியான் விளங்கிவருகின்றான். என்பதை அனுபவிப்பவர்கள்தானே உணரமுடியும்.

ஓம் முருகா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சந்நிதியான் - நான்கு

ஓடிச்செல்லுகின்ற ஆற்றுவெள்ளத்தில் தோன்றி மறைகின்ற நீர்க்குமிழி போன்றதே இவ்வுலகத்தில் வாழுகின்ற மனித வாழ்க்கையும். இவ்வாறு நீர்க்குமிழி போல நிலையில்லாத வாழ்க்கையாக எமது வாழ்க்கை அமைந்திருந்தாலும் அது அர்த்தமுள்ளதாக அமையவேண்டுமானால் இதனைத் தர்மநெறி சார்ந்த வாழ்க்கையாக நாம் அமைத்துக்கொள்ள வேண்டியது அவசியமாகும். தர்மநெறி சார்ந்ததாக மட்டுமன்றி பக்தி மார்க்கத்தின் வழிச்செல்வதாகவும் அது அமைந்திருக்குமானால் உண்மையில் அது பயனுள்ள ஒன்றாகவே அமைந்திருக்கும் என்பதில் எந்தவித சந்தேகமுமில்லை.

இவ்வாறு தர்மநெறி சார்ந்ததாகவும் அதேநேரம் சந்நிதியானின் மீது அளவில்லாத பக்தி உள்ளவர்களாகவும் வாழ்ந்து வருகின்ற ஒரு குடும்பத்தினருக்கு சந்நிதியான் ஏற்படுத்திய அற்புத நிகழ்வினை மதிப்பிற்குரிய வ.குமாரசாமி ஐயர் அவர்கள் எமக்கு எழுதி அனுப்பியுள்ளளார். சம்பந்தப்பட்ட குடும்பத்தவர்கள் தமது பெயர் விடயங்களை வெளியிட விரும்பவில்லை. ஆனாலும் நாங்கள் அவர்களிடம் கேட்டுப்பெற்றுக்கொண்ட சில விடயங்களை அடியார்களுக்கு இங்கே வழங்குகின்றோம். இவர்களின் சொந்த இடம் உரும்பிராய். குடும்பத்தலைவர் தற்பொழுது புத்தளம் அரசினர் வைத்தியசாலையில் வைத்திய அதிகாரியாகக் கடமையாற்றிக்கொண்டிருக்கிறார். குடும்பத்தின் ஏனைய உறுப்பினர்கள் தற்பொழுது உரும்பிராயில் வசித்து வருகின்றனர். வ.குமாரசாமி ஐயர் அவர்கள் இக்குடும்பம் தொடர்பாக எழுதியனுப்பிய அற்புத நிகழ்வினை அப்படியே இங்கு தருகின்றோம்.

“குடும்பத்தலைவி பக்திக்கோர் இலக்கணமாய் வாழ்பவர். அடிக்கடி வந்து சந்நிதியானைச் சேவிப்பவர் அல்லர் முருகன் பதியை விட்டு நெடுந்தொலைவில் வாழ்பவர். ஆனால் உள்ளத்தில் சந்நிதியானை நிலை நிறுத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் மீது பக்தி செலுத்தி வருபவர். இதனால் அவர் கண்ட கனவு நிஜவாழ்க்கையில் நிதர்சனமாகி விட்டது. ஆம் மாதரசியின் மூத்த புதல்வி (A/L) பரீட்சைக்குப் படித்துக்கொண்டிருந்தார். மகள் படிப்பில் கவனம், தாயோ பிரார்த்தனையிற் கவனம். ஒருவாறு பரீட்சை முடிந்தது. பெறுபேறுகள் வரும்நாள் அண்மித்து விட்டது. தாயின் வேண்டுதலும் பிரார்த்தனையும் பெருகிவிட்டது. இன்னும் ஓரிரு தினங்களில் முடிவுகள் வெளிவந்துவிடும் என்ற நிலையில் அம்மையாருக்கு முருகனை வேண்டுதல் செய்வதிலே நேரம் ஓடியது. இந்நிலையில் அம்மையார், கடமைகள் முடித்து முருகனை வேண்டுதல் செய்து வழமைபோல் நித்திரைக்கு சென்றார்கள்.

அற்புதமான ஆனந்தமானதோர் காட்சியை அன்று இரவு கனவில் கண்டார். வெண்ணீறு அணிந்த அழகிய தாடியுடன் ஆனந்தம் தரக்கூடிய தோற்றம் மிக்க சுவாமி ஒருவர் இவரின் இல்லத்தின் வாசலிலே நின்றார்கள். அம்மையாரின் கரங்களிலே, 3 பெரிய கன்டோஸ் பைக்கட்டுகளையும், ஒரு பிஸ்கட் பெட்டியையும் வைத்து “சோறு முடிஞ்சுது, சோறு முடிஞ்சுது” என்றுகூறி விடுவிடுவென விரைந்து திரும்பிச் சென்று விட்டார்கள்.

திடுக்குற்று கண்விழித்த அம்மையாருக்கு, சந்தோசமான ஓர் உணர்வு ஏற்பட்டது. ஆனால் கனவில் அர்த்தம் சரியாகப் புரியாமல் குழம்பிப்போய் விட்டார். ஓரிரு தினங்களில் மகளின் (A/L) தேர்வு முடிவுகள் வெளிவந்த போது அவருக்குக் கனவின் தாற்பரியம் புரிந்து விட்டது. மகளுக்கு பரீட்சையின் பெறுபேறுகள் 3 (A), 1 (B) என்பதாகக் கிடைத்தது. அம்மையாருக்கு முருகனின் ஆடல் புரிந்து விட்டது.

பசித்தவர்க்கு அன்னமளித்து “அன்னதானக் கந்தன்” என்று பெயரெடுத்த சந்நிதிக்கந்தன் **“சோறு முடிஞ்சுது”** என்று சொன்னதின் பொருளை உணர்ந்து கொண்ட அம்மையார் பெரும் அன்னதானப்பணி ஒன்றை முருகனுக்கு கடந்த தைப்பூச நன்னாளில் நிறைவேற்றி வைத்தாகள்.”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பந்தப்பட்ட மகள் தற்பொழுது பல்கலைக்கழகத்தில் பொறியியல் பிரிவில் தனது கல்வியைத் தொடர்வதையும், இக்குடும்பத்தினர் தமது ஆண்மகவுக்கு குகன் என்ற முருகநாமத்தை சூட்டிள்ளதையும் எம்மால் அறியமுடிகிறது.

இன்று எம்மில் பலர் ஏதோ பிறந்துவிட்டோம் எப்படியாவது வாழ்ந்து காலத்தைப் போக்குவோம் என்று வாழுகின்றனர். அது மட்டுமன்றி பொதுவாக பணத்தைச் சேகரிப்பதே வாழ்க்கையின் மிகமுக்கிய குறிக்கோள் என்று வாழ்ந்துகொண்டிருக்கின்ற வாழ்க்கைப்போக்கும் இன்று முனைப்புப்பெற்றதாக மாறி வருவதையும் எம்மால் உணரமுடிகின்றது.

அதே நேரம் தூய்மையான பக்தி உணர்வுடன் இடைவிடாது இறைவனைத் தியானிக்கின்ற அன்பர்களுக்கு இறைவனின் அருட்கடாட்சம் கிடைத்து வருவதும் நாங்கள் அனுபவத்தால் அறிகின்ற விடயங்களே. ஆம்! கலியுகக் கந்தனாகிய சந்நிதியானைத் தியானிக்கின்ற அன்பர்களுக்கு இது போன்ற அற்புதங்கள் இன்றும் நடந்த வண்ணமே இருக்கின்றன என்பதை மேற்படி சம்பவங்கள் எமக்குக் காட்டுகின்றதல்லவா?

ஓம் முருகா!

13945 cc



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோகர் சுவாமிகள் சந்நிதியானைத் தரிசிக்க ஒருமுறை வந்தபொழுது வாகனத்திலிருந்து கீழே இறங்குவதற்குத் தனது பாதங்கள் கூசுகின்றது என்று தன்னுடன் வந்தவர்களுக்கு கூறினார்கள். அதற்கு அவருடன் கூட வந்தவர்கள் குழம்பிப்போய் நின்ற பொழுது இங்கே எங்கு பார்த்தாலும் சிவலிங்கங்கள் தெரிகின்றதே எப்படி இந்த புனித மண்ணிலே பாதங்களை வைப்பது என்றும் ஆதங்கப்பட்டுள்ளார்கள். இத்தகைய புனிதமும் மகிமையும் பொருந்திய தொண்டமானாற்று ஆற்றங்கரையிலே நாடிவந்து குடிகொண்டிருக்கின்ற சந்நிதியானை அடியார்கள் நாடி வருவதில் வியப்பேதும் உண்டோ அதுமட்டுமன்றி தனது அருட்கடாட்சத்தைப் பெற்ற பல அருளாளர்களையும், சித்தர்களையும், ஞானிகளையும் இவ்வாலயச் சூழலில் காலத்திற்கு காலம் வாழச்செய்து அவர்கள் மூலமும் இவ்வாலயத்திற்குச் சிறப்பையும், புனிதத்தையும் ஏற்படுத்திக் கொண்டிருப்பதனால் தானே சந்நிதியானைக் கலியுகக்கந்தன் என்றும் அழைக்கின்றோம்.

புங்குடுத்தீவைப் பிறப்பிடமாகக் கொண்டு தற்சமயம் சந்நிதியில் அமைதியாக அருள் வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கும் சுவாமிகள் தொடர்பான அற்புத நிகழ்வு ஒன்றை கடந்தவருடம் சித்திரை மாதமலரில் வெளியிட்டிருந்தோம். மேற்படி சுவாமிகள் எவ்வாறு சந்நிதியானுடைய அருளாட்சிக்கு ஆட்பட்டார் என்பதையும் அவரது வாழ்க்கையில் இடம்பெற்ற ஒரு அற்பத நிகழ்வையும் அடியார்களுக்கு இங்கே தருகின்றோம்.

1949 ஆம் ஆண்டு மேற்படி புங்குடுத்தீவுச் சுவாமிகளின் தாயார் ஒரு பயங்கரமான கனவுகண்டார். கனவு கண்டு கண்விழித்தவர் **“என்செல்வச்சந்நிதியானே என்னுடைய மகனை இரண்டு.....”** என்று கத்தியவர் அதற்குமேல் வார்த்தைகள் வராது வாயடைத்துப்போய் கதைக்கமுடியாத நிலைக்கு ஆளானார். இவ்வாறு பேசமுடியாது வாயடைத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையிலேயே மூன்று நாட்கள் சென்றது. மூன்றாம் நாள் வாய்திறந்து கதைக்கும் நிலைக்கு சுகம் பெற்ற சுவாமிகளின் தாயார் தான் கண்ட கனவின் பயங்கரத்தை மற்றவர்களுக்கு எடுத்துக்கூறினார்.

கனவு கண்ட வீட்டிற்கு வடக்கே இருந்த பண்டார முருகன் கோயிலில் இருந்து இரண்டு பண்டாரங்கள் சுவாமிகளின் தாயாரிடம் வந்து உனது மூத்த மகன் எங்கே (மேற்படி சுவாமிகள்) என்று கேட்டு அவரைக் கூப்பிட்டனர். அப்படிக் கூப்பிட்டவரை வாயில் அலகு குத்திய ஓர பண்டாரம் அவரை வெள்ளைத்துணியின் மேல் படுக்கச செய்ய மற்றப்பண்டாரம் கூரிய வாளினால் இவரது மகனை ஓங்கி வெட்டியுள்ளார். அவ்வாறு வெட்டுகின்ற காட்சியைப் பார்த்த தாயார் தனது மகன் இரத்த வெள்ளத்தில் இரண்டுத் துண்டுகளாகக் கிடப்பதைக் கண்ட அந்த பயங்கரத்தினாலேயே இரண்டு துண்டுகளாகக் கிடக்கின்ற தனது மகனைக் காப்பாற்ற செல்வச்சந்நிதியானை ஆபத்பாந்தவனாக நினைத்து அழைத்துள்ளார்.

நேரடியாகச் சந்நிதியானிடம் எவ்வித ஆழமான தொடர்பும் இல்லாத நிலையில் தான் செல்வச்சந்நிதியானிடம் அபயம் கேட்டு குரல் எழுப்பியதையிட்டு சுவாமிகளின் தாயார் தனக்குள் ஆச்சரியப்பட்டார். ஆனால் அதேநேரம் சந்நிதியானுடைய அருளினால்தான் தனது பிள்ளை எதிர்நோக்கும் துன்பங்களில் இருந்து விடுபடமுடியும் என்பதுடன் தனது மகன் சந்நிதிக்கே உரியவர் என்பதையும் காலப்போக்கில் அனுபவங்கள் மூலம் உணர்ந்து கொண்டார்.

சந்நிதியானின் திருவருள் நிரம்பப்பெற்ற சுவாமிகள் மற்றவர்களது பார்வைக்கு ஒரு சராசரி மனிதர் போலக்காட்சி தந்தாலும் இறைவனின் திருவிளையாடல்களை தனக்குள்ளே உணர்ந்து இறையருள் நிறைந்தவராக வாழத்தொடங்கினார்.

சுவாமிகள் வாழ்க்கைப்பயணம் இறையருள் நிறைந்தது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
288287

என்பதை வெளிப்படுத்துகின்ற 1958 ஆம் ஆண்டு நடைபெற்ற ஒரு சம்பவத்தை இங்கே தருகின்றோம். 1958 ஆம் ஆண்டு சுவாமிகள் ஒரு சராசரி மனிதராக யாழ்ப்பாணத்தில் ஒரு கட்டிட ஒப்பந்தக்காரரின் கீழ் வேலைசெய்து கொண்டிருந்தார். அப்பொழுது பூநகரியிலுள்ள இவரது நண்பர் யாழ்ப்பாணத்திலுள்ள ஒரு கடையில் தான் திருத்துவதற்கு கொடுத்த பொருளைப் பெற்றுக்கொள்ள வந்திருந்தார். கடைபூட்டப்பட்டிருந்ததால் தனது நண்பனான மேற்படி சுவாமிகளிடம் வந்து நலம் விசாரித்ததுடன் தான் வந்திருந்த விடயம் பற்றியும் கூறிவிட்டு பூநகரிக்கு திரும்பிச் சென்றுவிட்டார்.

சுவாமிகள் சில தினங்களுக்குப் பின்பு கிளிநொச்சிக்கு செல்ல வேண்டியிருந்ததால் தனது சினேகிதனுடைய பொருளை குறிப்பிட்ட கடைக்குச் சென்று உரிய பணத்தைச் செலுத்தி அதனைப்பெற்று செட்டியகுறிச்சி என்ற இடத்திலுள்ள தனது சினேகிதனிடம் கொண்டு சென்று கையளித்தார்கள். தன்னிடம் பயணத்திற்காக இருந்த பணத்தைக் கொடுத்தே அந்தப்பொருளை சுவாமிகள் பெற்றக் கொண்டதனால் வாங்கிவந்த பொருளுக்குரிய பணத்தை தனது சிநேகிதரிடம் சுவாமிகள் கேட்டார்கள். அதற்கு சினேகிதன் நீங்கள் அறிவித்துவிட்டு வந்திருந்தால் பணத்தை ஒழுங்குபண்ணி வைத்திருக்கலாம் இப்பொழுது தன்னிடம் எந்தப் பணமும் இல்லையே என்று தனது நியாயத்தை பக்குவமாக எடுத்துக் கூறினார். அந்தப் பணத்தை நம்பி கிளிநொச்சிக்கு பயணத்தை தொடரவந்த சுவாமிகளுக்கு அதுபெரிய ஏமாற்றமாக இருந்தது. ஏற்பட்ட ஏமாற்றத்தினையும், துன்பத்தினையும் தனக்குள்ளே சுவாமிகள் ஜீரணித்துக்கொண்டார்கள். எல்லாம் சந்நிதி வேலனின் வழிப்படியே நடக்கின்ற காரியங்கள் தானே நல்லதிற்கும் அவனே பொறுப்பு, தீயதிற்கும் அவனே பொறுப்பு எல்லாவற்றையும் நீயே பார்த்துக்கொள் என்று சந்நிதியானிடம் முறையிட்டுவிட்டு சுவாமிகள் பேருந்து வண்டிக்கு கொடுப்பதற்கு பணம் இல்லாத நிலையில் 12 மைல்கள் நடந்து கிளிநொச்சிக்கு சென்றடைந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில நாட்களின் பின் மீண்டும் யாழ்ப்பாணத்திலிருந்து பூநகரிக்கு தனது சினேகிதனிடம் செல்லுகின்ற சந்தர்ப்பம் சுவாமிகளுக்கு ஏற்பட்டதனால் அவரிடம் சென்றடைந்தார். அப்பொழுது அந்த சிநேகிதன் தான் பசு மாடு ஒன்றை வாங்குவதற்கு நீண்ட நாட்கள் முயற்சி செய்வதாயும் ஆனால் அந்த முயற்சி தடைப்பட்டுக் கொண்டு வருவதாயும் சுவாமிகளிடம் எடுத்துக்கூறினார் நான்கு மாதக்கண்டுடன் கூடிய பசு மாட்டிற்கு அச்சவாரம் கொடுத்தும் அது தடைப்பட்டுவிட்டது. இன்னொரு இடத்தில் தாச்சி மாடு ஒன்று நிற்கிறது அதனை வாங்குவோம் என்று பார்த்து எல்லாமே பேசி முடித்தாகி விட்டது. அதனுடைய கயிற்றைப்பிடித்தால் அது கீழே விழுந்து படுத்துவிடுகிறது எப்படி அதனை வீட்டிற்கு அழைத்து வருவது. எல்லாம் தடையாகவே உள்ளது என்றும் தனது பரிதாபநிலையை சுவாமிகளுக்கு எடுத்துக்கூறினார்.

தனது சினேகிதனுடைய நிலையை உணர்ந்து அவருக்கு உதவுவதற்கு சுவாமிகள் முன்வந்தார்கள்.
பூநகரியில் தனது சிநேகிதனின் வீடு அமைந்துள்ள இடத்திலிருந்து 3 மைல்கள் மேற்கேயுள்ள வில்லடிபதநிலை என்ற இடத்திலுள்ள வீட்டிற்கு இருவரும் சென்று அந்த பசுமாட்டைப் பணம் கொடுத்து வாங்கினார்கள். மிகவும் சிரமப்பட்டு காலை 8 மணிக்கு தொடங்கிய பயணம் பிற்பகல் ஒரு மணியை அடைந்தும் அரைவாசித் தூரத்திலேயே நிற்கிறது. அதாவது 5 மணித்தியாலயங்கள் சிரமப்பட்டு 1 1/2 மைல் தூரத்திற்கே அந்த மாட்டை அழைத்துவர முடிந்தது. பசியின் கொடுமையைப் புரிந்துகொண்ட சுவாமிகளின் சிநேகிதன் சுவாமிகளை அங்கேயே இருக்குமாறு கூறி 1 1/2 மைல் தூரத்திலுள்ள தனது வீட்டிற்குச் சென்று மத்தியானசாப்பாட்டை எடுத்து வந்து அங்கே இருவரும் உட்கொண்டு பசியாறினார்கள்.

அதன் பின்பு இருவரும் ஒருவாறு பகீரதபிரயத்தனத்தின் பின்பு மீண்டும் மாட்டை எழுப்பி மெதுமெதுவாக சினேகிதருடைய வீட்டை நோக்கி நடத்திச்செல்ல முயற்சித்தனர். அப்பொழுது அந்த சினேகிதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**“ஒரு மாட்டை வாங்கவேண்டும் என்பதற்காக வீட்டிலிருந்த பணத்தைக் கூட உங்களுக்கும் தராமல் வைத்திருந்துதான் இப்போது மாட்டை வாங்கினேன் ஆனாலும் வாங்கியமாட்டை கூட்டிச்செல்ல எவ்வளவு கஸ்ரப்படுகின்றோம் பார்த்தீர்களா”** என்று தூய்மையான அன்புடன் தனக்கு உதவிசெய்து கொண்டிருக்கும் சுவாமிகளுக்கு தான் முன்பு செய்த துரோகத்தை மனம் திறந்து எடுத்துக் கூறினார்கள். என்ன ஆச்சரியம் இந்த உண்மையை அவர் கூறியதுதான் தாமதம் நடப்பதற்கே தயக்கம் காட்டிய அந்த பசுமாடு இவர்கள் பிடித்திருந்த கயிற்றையும் பறித்துக்கொண்டு சிநேகிதனுடைய வீட்டிற்கு அருகிலுள்ள விநாயகர் ஆலயம் வரைக்கும் ஒரே ஓட்டமாக ஓடிச்சென்று அங்கே இவர்கள் இருவரினதும் வரவையும் எதிர்பார்த்து காத்திருந்தது.”

பின்தொடர்ந்து தனது அடியவர்களை நிழல்போல அவர்களின் துன்பங்களை போக்கி வருபவன் சந்நிதிமுருகன், அடியவர்கள் மீது அளவில்லாத அன்பு கொண்ட சந்நிதிமுருகன் இலைமறைகாய்போல வாழ்ந்து வருகின்ற சித்தர்கள், ஞானிகளது வாழ்க்கைப் பயணத்தில் அவர்களுக்கும், அவர்கள் மூலம் மற்றவர்களுக்கும் நாள் தோறும் நடாத்திக் கொண்டிருக்கின்ற இது போன்ற அற்புதங்களை எம்மால் வார்த்தைகளால் கூறத்தான் முடியுமா?

அதுவும் கோமாதா மூலம் வெளிப்படுத்திய இந்த அற்புதத்தின் மூலம் கோமாதாவின் தெய்வப் பண்புகளையும் நாம் உணர முடிகின்றதல்லவா! மேற்படி புங்குடுதீவுச் சுவாமிகள் சந்நிதியான் ஆச்சிரமத்தில் அருள் வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருப்பதை அடியார்கள் காணமுடியும். எல்லாம் அவன் அருளாலே.

ஓம் முருகா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சந்நிதியான் - ஆறு

சந்நிதி ஆலயத்தின் தனித்துவமான அம்சங்கள் பல இருந்தாலும் அங்கே இடம்பெற்றுவரும் சமயச்சடங்குகளும், வழமைகளும் அவனை வழிபடுகின்ற அடியவர்கள் பெறுகின்ற பக்தி அனுபவங்களும் குறிப்பிட்டுக் கூறக்கூடிய சிறப்புக்கள் நிறைந்தவையாகும்.

கதிர்காமத்தில் அருள்பாலித்துக் கொண்டிருக்கும் கந்தக்கடவுளுக்கும் ஆற்றங்கரையில் அமர்ந்திருக்கும் சந்நிதி முருகனுக்கும் மிக நெருக்கமான தொடர்புகள் இருந்து வந்துள்ளதைப் புராணக்கதைகளில் மட்டுமன்றி சந்நிதி ஆலயத்தின் வரலாறுகளிலிருந்தும் எம்மால் அறியமுடிகிறது.

சந்நிதி முருகன் தனக்கு நித்திய பூசைகள் நடத்துமாறு மருதர் கதிர்காமருக்கு வேண்டுகோள் விடுக்க அவர் பூசையை மேற்கொள்வதற்குரிய அறிவோ பூசை முறைகளோ தனக்குத் தெரியாதென்று கூறியதாக ஆலய வரலாறு கூறுகின்றது. இந்த நிலையில் சந்நிதியான் மருதர் கதிர்காமருடைய கண்களை மூடுமாறுகூறி அவரைக் கதிர்காமத்திற்கு அழைத்துச்சென்று அங்குள்ள நடைமுறைகளையும், பூசைமுறைகளையும் காண்பித்து அதே போலத்தனக்கும் வாய்கட்டிப் பூசை செய்யுமாறு எடுத்துக் கூறியதாக அந்த வரலாறு மேலும் எடுத்துக் கூறுகின்றது.

கதிர்காம உற்சவம் ஆரம்பிக்கின்ற முதல் நாள் சந்நிதி முருகன் அங்கிருந்து கதிர்காமம் செல்வதும் மீண்டும் கதிர்காமத்தில் தீர்த்தத் திருவிழா நடைபெறும் நாள் இரவு அங்கிருந்து திரும்பி சந்நிதிக்கு வருவதுமாகிய இந்த இரண்டு நாட்களும் சந்நிதியின் முக்கிய தினங்களுக்குள் அடங்கும்.

ஒருநாள் இரவு மருதர் கதிர்காமர் நித்திரையில் இருக்கும் பொழுது சந்நிதியான் அவரை நித்திரையினின்றும் எழுப்பி நான் கதிர்காமத்திலிருந்து வருகின்றேன். எனக்குப் பசியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களையும் அதிகமாக உள்ளது. உண்பதற்கு ஏதாவது கொடு என்று கேட்டுள்ளார். அதற்கு மருதர் கதிர்காமர் இந்த வேளையில் தங்களுக்கு அமுது படைக்க எங்கு போவேன் என்று மனம்நொந்து சந்நிதி முருகனைக் கேட்ட பொழுது அதற்குச் சந்நிதி முருகன் உன்னிடம் உள்ள பயற்றைத் துவைத்து இளநீரும்தா என்று கேட்கவே கதிர்காமரும் அவ்வாறே திருவமுது படைத்துள்ளார். இந்த நாள் தற்பொழுதும் கதிர்காமத்திலிருந்து திரும்பும் நாளாகக் (வேல் திரும்பும் நாள்) கொண்டாடப்படுகின்றது. இந்த நாளில் மருதர் கதிர்காமர் படைத்தது போலப் பயற்றம் துவையலும், இளநீரும் நைவேத்தியமாகப் படைக்கும் வழக்கம் தொடர்ந்தும் சந்நிதியில் சிறப்பாகப் பேணப்பட்டு வருகின்றது.

இது போன்றே கதிர்காமத் திருவிழா ஆரம்பிக்கும் முதல் நாள் வேல் செல்லும் தினமாக அதாவது கதிர்காமத்திற்குச் சந்நிதியானை வழி அனுப்பும் தினமாகக் கொண்டாடப் பட்டு வருகின்றது. இந்த நாளில் மாலை நேரம் அதுவும் மையல் நேரத்தில் விசேஷ பூசையின் பின்னர் மூலஸ்தானத்திலிருந்து பிரதம பூசகர் தனது இரண்டு கைகளினாலும் பொத்தியபடி (சந்நிதியானை) வெளியே வர ஏனைய பூசகர்களும் மற்றும் பூக்காரர் போன்றோரும் அவருக்குக் கேடயம் அமைத்துக் கிழக்கு வாயில் வழியாகக் கூட்டிக்செல்வார்கள். அங்கே சிட்டிவிளக்குகளால் அவர்கள் செல்லுகின்ற பாதை ஏற்கனவே ஒழுங்கமைக்கப்பட்டிருக்கும். இந்தப் பாதையினூ டாக அவர்கள் எல்லோரும் எவரும் என்ன நடக்கின்றது என்பதை உணரமுடியாத அளவுக்கு வேகத்துடனும், பக்திபரவசத்துடனும் வெளிவீதியையும் தாண்டிச்சென்று கொண்டிருப்பர்கள். அதே நேரம் அடியார்கள் அரோகரா அரோகரா என்ற கோஷங்களைக் கிளப்ப இறுதியாக அங்கே காணப்படும் அரசமரத்தடியில் சந்நிதியானை வழியனுப்பும் நிகழ்வு இடம்பெறும். அங்கே ஆகாயத்தை நோக்கியபடி பொத்திய கைகளைப் பூசகர் உயர்த்திச் சந்நிதியானை வானத்தினூடாக வழியனுப்பி வைக்கும் பொழுது ஏற்படுகின்ற பக்தி உணர்வு கட்டுப்படுத்த முடியாத அளவிற்கு எல்லோருடைய உள்ளத்திலும் பொங்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுந்து கரைபுரண்டு ஓடுவது கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். அதே நேரம் பக்தர்கள் தங்கள் கைகளில் வைத்திருக்கின்ற தேங்காய்களைச் சிதற அடித்துச் சந்நிதியானை வழியனுப்புவதும் ஒரு வழக்கமாக உள்ளது. மேலும் குறிப்பிட்ட அந்த சாயரட்சப் பூசையின் பொழுது உழுத்தம் பிட்டே திருவமுதாகப் படைக்கப்படுவதும் வழக்கமாக இருந்து வருகின்றது. அனைவருக்கும் அன்று உழுத்தம்பிட்டு பிரசாதமாக வழங்கப்படும்.

இவ்வாறான சடங்கு முறைகளும் பக்தி அனுபவங்களும் சந்நிதிக்கே உரித்தான தனித்துவமான அம்சங்கள் என்பதை இங்கே நாம் உணர முடிகின்றதல்லவா! மேலும் சந்நிதியான் கதிர்காமக் கந்தனுடன் கொண்டிருக்கின்ற உறவை வெளிப்படுத்திய நிகழ்வு ஒன்றையும் இங்கே குறிப்பிடுவது பொருத்தமானதாகும்.

தற்பொழுது சந்நிதியில் அருள் வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கின்ற புங்குடுதீவுச் சுவாமிகள் 1979ஆம் ஆண்டு வைகாசி மாதம் கதிர்காமத்திற்கு யாத்திரை செய்வதற்குத் திட்டமிட்டு அங்கே சென்று கையளிப்பதற்காக ஒரு வேலையும் ஒரு தொகைப்பணத்தையம் சேகரித்து வைத்திருந்தார்கள். ஆனால் அவர் நேர்த்தி செய்தது போலக் கதிர்காமத்திற்கு அந்த வருடம் யாத்திரை செய்ய முடியாத வகையில் பல வசதியீனங்கள் அவருக்கு ஏற்பட்டன. இவ்வாறான நிலை ஏற்பட்டதையிட்டு மிகவும் மனம் வருந்திய சுவாமிகள் என்ன செய்வது என்று தெரியாது குழம்பிப்போய் இருந்தார்கள். நேர்த்தி செய்த வேலை நேர்த்தி வைத்தபடி கதிர்காமத்தில் கையளிக்காமல் இருப்பது அவருக்குப் பெரிய வேதனையாகவே இருந்தது. ஒரு நாள் இரவு சந்நிதியான் கனவிலே காட்சி கொடுத்தார். அவர் சிறிய பையனைப் போலவும் தலையிலே தலைப்பாகையும் அணிந்து பார்ப்பதற்குத் திருஞானசம்பந்தர் போன்ற தோற்றமளித்தார். இவ்வாறான தோற்றத்துடன் வந்த சந்நிதியான்

**“கதிர்காமத்தில் சமர்ப்பிக்க வேண்டிய எனக்குரிய பொருட்களை என்னிடம் கொண்டு வா”**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று புங்குடுதீவுச் சுவாமிகளுக்கு எடுத்துக் கூறினார்.

குழம்பிப்போய் இருந்த சுவாமிகள் சந்நிதியான் காட்சி கொடுத்துக் கூறியதற்கிணங்கக் குழப்பம் தெளிந்து கதிர்காமக்கந்தனும் சந்நிதி முருகனும் ஒருவரே என்பதை உணர்ந்து தான் கதிர்காமக் கந்தனுக்கு நேர்த்தி வைத்த வேலை சந்நிதியிலேயே கையளித்துத் தனது கவலையைப் போக்கிக் கொண்டார்கள்.

செல்வச்சந்நிதியைச் சின்னக்கதிர்காமம் என்று அழைக்கின்ற வழமை ஆரம்பக்காலத்திலிருந்தே இருந்து வந்துள்ளதை நாம் அறிகின்றோம். அவ்வாறான அந்த தொடர்புகளும், நம்பிக்கைகளும் இறை வாக்குகளின் அடிப்படையில் தான் உருவாக்கப்பட்டு மக்கள் அதனைக் கடைப்பிடித்து வருகின்றனர். என்பதை மேற்படி சந்நிதியானின் அருட் காட்சி எமக்கு எடுத்துக் காட்டுகின்றதல்லவா!

ஓம் முருகா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்நிதி ஆலயத்தின் தலவிருட்சமாக விளங்குவது புனித பூவரச மரமாகும். சந்நிதியில் வாழ்ந்த மகான் ஒருவருடைய சமாதியுடன் இந்தப் பூவரசமரம் தொடர்புபட்டுள்ளதாக நம்பப்படுகிறது. இந்தப் புனிதமரம் சந்நிதி ஆலயத்தின் மேற்கு வீதியில் வள்ளியம்மன் வாசலுக்கு எதிராக என்றும் பசுமையுடன் காட்சி தந்து கொண்டிருப்பதை நாம் காணலாம்.

ஆரம்ப காலத்திலிருந்தே இது ஒரு அற்புதவிருட்சமாக விளங்கி வருகின்றது. அடியவர்கள் இதன் சிறப்பையும் புனிதத்தையும் உணர்ந்து இந்த மரத்தின் பழுத்த இலைகளைப் புனிதப் பொருளாகக் கருதி எடுத்துச் செல்வது வழக்கம். அதுமட்டுமன்றி சந்நிதியான் மேற்கொள்ளுகின்ற திருவிளையாடல்களில் ஒரு அங்கமாக அல்லது அடையாளமாகவும் இந்தப் பூவரசமிலை விளங்கி வந்திருப்பதையும் நாம் காணமுடிகிறது. மிக அண்மையில் நடைபெற்ற அவ்வாறான ஒரு அற்புத நிகழ்வினை இங்கே வழங்குகின்றோம்.

திரு. பா. முருகதாஸ் என்பவர் வல்வெட்டித்துறையில் ஊரிக்காடு என்ற இடத்தில் வாழ்ந்துவருகின்ற இறைபக்தியுள்ள ஓர் அன்பர். அவர் இளமையிலிருந்தே கார் ஓட்டுகின்ற தொழிலை மேற்கொண்டு வருகின்றார். அவர் தன்னுடைய காரிற்கு “கல்யாணி” என்று பெயரிட்டுள்ளார். அந்தக் கார் தொடர்பாக கதைப்பவர்கள் அவரின் பெயரைக் குறிப்பிட்டுக் “கல்யாணிக்” கார் என்றே கதைப்பது வழக்கம்.

பொதுவாக வடமராட்சியில் உள்ளவர்கள் திரு. முருகதாசையும் அவரது கல்யாணிக் காரையும் தெரிந்து வைத்திருக்கிறார்கள் என்று கூறலாம். எந்த ஆபத்தான வேளையிலும் எவருக்கும் மறுக்காமல் அவர் தன்னுடைய காரை வாடகைக்கு ஓட்டிச் செல்ல முன் வருவதே இதற்குக் காரணமாகும். இவ்வாறு ஆபத்பாந்தவனாகச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பட்டு வந்த இந்த அன்பர் 1996-ஆம் ஆண்டு இடப் பெயர்வுடன் வன்னிக்குக் குடும்பத்துடன் இடம்பெயர வேண்டிய நிலை ஏற்பட்டது. இவர் வன்னியில் வாழ்ந்து கொண்டிருக்கும் பொழுது இராணுவத்தினுடைய பிரதேச விஸ்தரிப்புச் செயற்பாட்டின் பொழுது இராணுவத்தால் கைதுசெய்யப்பட்டு பல கஸ்டங்களுக்கு உட்படுத்தப்பட்டார். அதைத்தொடர்ந்து பண்டாரவளையில் அமைந்துள்ள ஐக்கிய இளைஞர் புனர்வாழ்வுக் கழகத்திற்கு நன்னடத்தைக்காக அனுப்பப்பட்டார். அங்கே அவர் தனக்கே இயல்பாக உள்ள நற்பண்புகளுடன் செயற்பட்டதுடன் அங்கே உள்ள இந்துக் கோவிலையும் நல்ல முறையிற் பராமரித்து வந்தார். இக்காரணங்களால் இவர் தன்னுடைய நன்னடத்தைக் காலத்தில் குறிப்பிட்ட காலத்திற்கு முன்பே விடுதலைப் பெற்று வீடுவந்து சேர்ந்துள்ளார்.

திரு. பா. முருகதாஸ் அவர்கள் தற்பொழுது கம்பர்மலை வல்வெட்டித்துறை என்ற விலாசத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார். வன்னியில் இராணுவக்கைதின் பொழுது இவர் பல இலட்சம் ரூபா பெறுமதியான சொத்துக்களையும் வாகனங்களையும் இழந்துள்ள காரணத்தால் தற்பொழுது தொழிலை மேற்கொள்ளக்கூடிய வசதிகள் எதுவுமின்றி அன்றாடம் தன்னுடைய குடும்பத்தை நடாத்துவதற்கு வருமானமேதுமின்றி மிகவும் கஸ்டத்தின் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

ஆனாலும் இவர் தன்னுடைய இறை நம்பிக்கையைக் கைவிடவில்லை. சந்நிதி உட்பட தனது குடியிருப்பிற்கு அண்மையில் உள்ள எல்லா ஆலயங்களுக்கும் சென்று வருகின்ற வழக்கத்தைக் கடைபிடித்து வருகின்றார். 02-06-2000 ஆம் ஆண்டு வெள்ளிக்கிழமை திரு. பா. முருகதாஸ் அவர்கள் சந்நிதி ஆலயத்திற்குச் சென்று வழமை போல வழிபட்டுக்கொண்டிருந்தார். அப்பொழுது சந்நிதியின் தலவிருட்சமான பூவரச மரத்தின் கீழ்நின்று வழிபடும் பொழுது அவருடன் கூடநின்று வழிபட்டுக் கொண்டிருந்த தொண்டைமானாற்றைச் சேர்ந்த எல்லோராலும் நன்கு அறியப்பட்ட நல்லதம்பி என்ற


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பர் தலவிருட்சத்தினுடைய பழுத்த இலைகள் இரண்டினைத் திரு. முருகதாஸ் அவர்களிடம் வழங்கி அவற்றைப் புனிதமாகப் பாதுகாக்குமாறு கூறினார்.

திரு. நல்லதம்பி அவர்கள் அந்த இலைகளை பக்குவமாக பாதுகாக்க வேண்டுமென்று கூறியதிலிருந்து திரு. முருகதாஸ் அவர்கள் அந்த இலைகள் புனிதமானவை என்பதை உணர்ந்து கொண்டார். ஆனாலும் அந்தப் புனித இலைகளுடைய சிறப்பு, பெருமை என்பன என்ன என்பதை திரு. முருகதாஸ் அவர்கள் அதுவரை தெரிந்திருக்கவில்லை. ஆகவே அவற்றை அறிந்து கொள்ள விரும்பினாலும் அந்த இடத்தில் அதனை விசாரிப்பது இங்கிதமற்ற ஒரு செயல் என்பதனால் அது பற்றி எவரிடமும் ஒன்றும் விசாரிக்காமலேயே வீடு திரும்பினார்.

அடுத்த நாள் சனிக்கிழமை திரு. முருகதாஸ் உடுப்பிட்டிச் சந்தைக்குச் சென்றிருந்தார். அங்கே இவரைப்பற்றி நன்கு அறிந்த, இவருடைய பொருளாதாரக் கஷ்டத்தை நன்கு உணர்ந்த எமது சந்நிதியான் ஆச்சிரம பேரவையின் முக்கிய உறுப்பினர் ஒருவர் அவரைச் சந்தையில் சந்தித்துச் சுகம் விசாரித்த பின் சந்தைக்கு அருகிலுள்ள தன்னுடைய வீட்டிற்கு அழைத்துச் சென்றார்கள். தனது வீட்டிற்கு அழைத்துச் சென்ற அந்த அன்பர் ஒரு தொகைப்பணத்தைத் திரு. முருகதாசிடம் வழங்கி ஏதோ தன்னால் செய்யக்கூடிய சிறிய உதவியாக அதை எடுத்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொண்டார். அத்துடன் திரு. முருகதாஸ் தன்னுடைய தொழிலை ஆரம்பிப்பதற்கு தேவையான மூலதனத்தைப் பெற்றுக்கொள்வதற்குச் சில வழிகளையும் கூறி அவருடைய துன்பத்தைப் போக்கும் நடவடிக்கையிலும் தன்னாலான உதவிகளைச் செய்ய முன்வந்தார்கள்.

நடந்து கொண்டிருக்கின்ற சம்பவங்கள் நிஜம் தானா? என்ற சந்தேகம் முருகதாசிற்கு ஏற்பட்டது. ஏனென்றால் ஒவ்வொரு நாளும் குடுப்பச்செலவுக்கு என்ன செய்யலாம், தனது தொழிலை ஆரம்பிக்க என்ன வழி இருக்கின்றது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று யோசித்துக் கவலையில் மூழ்கியிருந்த தனக்கு சந்நிதியானுடைய அந்த புனிதமான பூவரசம் இலை கிடைத்து மறுநாளே தனது துன்பத்திலிருந்து விடுவதற்குரிய ஒரு தீர்வு ஆரம்பமாகிவிட்ட அதிசயத்தை நன்கு உணர்ந்து கொண்டார்கள். அதுவும் எதிர்பாராத முறையில் தன்னை நாடிவருவது அவருக்கு அதைவிட அதிசயமாகவே தெரிந்தது.

தன்னைச் சுதாகரித்துக் கொண்ட திரு. முருகதாஸ் அவர்கள் அந்தப் பேரவை உறுப்பினரிடம் நேற்றைய தினம் புனித பூவரசமரத்தின் இலையைப் பெற்றுக்கொண்டது பற்றி அவரிடம் எடுத்துக் கூறினார்கள். அந்தப் புனித இலை தன்னிடம் கிடைத்ததைத் தொடர்ந்து தனது மனோநிலையில் அமைதியும், தெளிவும், உற்சாகமும் ஏற்பட்டு வருகின்ற அதிசயம் பற்றியும் எடுத்துக்கூறினார். மேலும் அந்த இலையினுடைய சிறப்பை யாரிடமாவது கேட்டுத் தெரிந்து கொள்ளவேண்டுமென்று நினைத்த தனக்கு இப்பொழுது சந்நிதியானே, அதனுடைய சிறப்பைக் காண்பித்துள்ள புதுமையை நினைத்து ஆனந்தப் பரவசம் அடைந்தார்கள். இவ்வாறு தனது உள்ளத்திலும், உடம்பிலும் மகிழ்ச்சி பொங்கத் தனது நன்றியை அந்த அன்பருக்கு வெளிப்படுத்திவிட்டுச் சந்நிதியான் புனித பூவரசமிலையினூடாக தன்மேற் கருணை காட்டுகின்ற அற்புதத்தைச் சிந்தித்தவண்ணம் அங்கிருந்து புறப்பட்டாாகள்.

தற்பொழுது அவருடைய கஷ்டங்கள் நீங்கி சொந்தமாக கார் வாங்கி வழமைபோல தனது வாழ்க்கைப் பயணத்தை தெடர்ந்து கொண்டிருப்பதையும் எம்மால் காணமுடிகின்றது.

எல்லாம் அவன் அருளாலே!

ஓம் முருகா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு ஊரிலும் ஒவ்வொரு சிறப்பு முனைப்புப் பெற்றதாகக் காணப்படும். நயினாதீவில் நாகபூஷணி அம்மன் ஆலயம் அமைந்திருப்பதும் அங்கே நாகபூஷணி அம்மன் திருவருளைப் பக்தர்கள் இலகுவாகப் பெறக்கூடியதாக இருப்பதும் அந்தக்கிராமத்திற்குச் சிறப்பைக் கொடுக்கின்றது. அதே போலவே, தொண்டைமானாற்றுக் கிராமத்திற்கும் சந்நிதி ஆலயத்தினால் இதுபோன்ற சிறப்பு ஏற்படுகின்றது. வீரவாகுதேவர் உட்படத் தேவர்பலர் புடைசூழ, முருகப்பெருமான் வடதிசை நோக்கிச் சென்று கொண்டிருந்த பொழுது மாலை நேரமாகிவிட்டதால் சந்நிதி ஆலயம் அமைந்திருக்கும் பகுதியில் தேவர்கள் எல்லோரும் தரை இறங்கிச் சாயரட்டைப் பூசையைச் செய்து அதனை முருகப் பெருமானை ஏற்றுக்கொள்ளச் செய்ததாக ஆலயத்தின் வரலாறு கூறுகின்றது. இதனால் உவகை அடைந்த முருகப் பெருமான் அளித்த அருள்வாக்கினால் இந்த ஆலயத்திற்கு வழிபட வருகின்ற முருகனடியார்கள் கலியுகக்கந்தனின் திருவருளை எளிதாகப் பெறுகின்ற பேற்றினைப் பெற்றுள்ளனர்.

இத்தகைய சிறப்பினைப் பெற்றுள்ள இந்த ஆலயத்தின் சூழலில் வாழ்கின்ற மக்களையும் உண்மையில் பூர்வபுண்ணியம் செய்தவர்களாகவே கருதவேண்டும்.

சந்நிதியானின் திருவருளின் அற்புதத்தை நன்கு உணர்ந்த இப்பகுதி மக்கள் சந்நிதியானைத் தமது குலதெய்வமாகக் கொண்டு வாழ்ந்து கொண்டிருப்பது மட்டுமன்றித் தமது வாழ்க்கையின் வேண்டுதல்களைச் சந்நிதியானின் திருவருளால் எளிதாக அடைந்து வருகின்ற தன்மையையும் எம்மால் உணரமுடிகிறது.

பிரதானவீதி, பெரியகடற்கரை, தொண்டமானாறு என்ற விலாசத்தில் திரு. திருமதி. அருந்தவராசா தவமணி குடும்பத்தினர் வசித்து வருகின்றனர். சந்நிதியானைத் தினமும் வழிபட்டு அவனே எல்லாம் என்று வாழ்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகின்ற அவர்களது வாழ்க்கைப் பயணத்திற் பல அற்புதங்களைச் சந்நிதியான் நிகழ்த்தி வருகின்றார். கடந்த வருடம் நடைபெற்ற அவ்வாறான ஒரு நிகழ்வினை அடியார்களுக்கு வழங்குகின்றோம்.

திரு. திருமதி. அருந்தவராசா தவமணி குடும்பத்தினரின் இரண்டாவது மகன் கருணாகரன் கடந்த வருடம் அதாவது 1999 - ஆம் ஆண்டு வெளிநாடு செல்வதற்கு ஆயத்தமானார். இதற்குத் தேவையான ஒழுங்குகளைச் செய்த பின் தாயார் தவமணி அவர்களும் மகன் கருணாகரன் அவர்களும் தமது குலதெய்வமான சந்நிதியானிடம் சென்று வழிபட்டு அவனிடமே தஞ்சமடைந்து பயணம் வெற்றியுடன் நிறைவேற வேண்டுமென்று மன்றாட்டத்துடன் சந்நிதியானுக்கு நேர்த்திக்கடன்களையும் செய்தனர்.

இதைத் தொடர்ந்து குறுகிய காலத்தில் மகன் கருணாகரன் கொழும்பு சென்று அங்கிருந்து தான் போகவேண்டிய இடமான இலண்டனுக்குத் தனது பிரயாணத்தை ஆரம்பித்தார். இவ்வாறு குறுகிய காலத்தில் அவருடைய பயணம் ஆரம்பித்தாலும் பயணத்தின் பாதியிலேயே எதிர்பாராத ஆபத்துக்களை எதிர்நோக்க வேண்டி ஏற்பட்டு பயணம் தடைப்பட்டது. அதுமட்டுமன்றிக் கருணாகரனும் மற்றும் அவருடன் சென்ற வேறுபலரும் சட்டவிரோதமாகப் பயணம் செய்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் ஆஸ்த்திரிய நாட்டுப் பொலிசாராற் கைதுசெய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டனர்.
சுகமான வாழ்க்கையைத்தேடி வெளிநாடு புறப்பட்ட கருணாகரன் சிறையிலிருந்து துன்பப்பட வேண்டியநிலை ஏற்பட்டது. அதுவும் அந்நியநாட்டில், தனது சொந்த உறவுகளை காணமுடியாத நிலையில் யாரும் அற்ற அநாதைபோலச் சிறையில் வாட வேண்டிய நிலை ஏற்பட்டதால் என்ன செய்வதென்று தெரியாத குழப்ப நிலைக்குத் தள்ளப்பட்டார். இவ்வாறு ஏறத்தாழ ஒரு மாதமாகத்துன்பப்பட்டுக் கொண்டிருந்த கருணாகரன் ஒரு நாள் துன்பம் தாங்கமுடியாது சந்நிதியானை நினைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகா என்னை ஏன் சோதிக்கிறாய் நான் உன்னிடம் தஞ்சமடைந்து உன்னை நம்பித்தானே புறப்பட்டேன் என்று மனம் வருந்தி முறைபிட்டபின் நித்திரைக்குச் சென்றார்.
அன்றிரவு சந்நிதியான்
**"யாமிருக்கப் பயமேன் என்றுகூறி இந்தப் பூவை நீ எடுத்துக்கொள்"**
என்றுகூறி மறைந்தருளினார். துடிதுடித்துக் கொண்டு கண்விழித்த கருணாகரன் சந்நிதியான் கனவில் காட்சி தந்ததால் மனதில் புதுத்தெம்பு தோன்ற நம்பிக்கை உணர்வுடன் காணப்பட்டார்.

அடுத்த நாள் தன்னுடன் இருந்தவர்களுக்கு நம்பிக்கை உணர்வுடன் தான் கண்ட கனவு பற்றிக் குறிப்பிட்டு விரைவில் தன்னுடைய பயணம் நல்லபடியாக நடந்தேற சந்நிதியான் விடைதருவார் எனவும் எடுத்துக்கூறினார். அதற்கு அவர்கள் நாங்கள் படுகின்ற துன்பம் ஒரு பக்கம் உனக்குச் சந்நிதியான் விடைதந்தவரோ என்று கருணாகரனைப் பார்த்துக் கேலி செய்தனர். சந்நிதியான் ஆபத்பாந்தவன் என்பதை அறியாத தனது நண்பர்கள் சந்நிதியானை கேலி செய்ததற்காக மனம் நொந்த கருணாகரன் சந்நிதியானை தியானித்த வண்ணம் அமைதியாக இருந்து விட்டார்.

என்ன ஆச்சரியம்! கனவுகண்ட மூன்றாம் நாள் கருணாகரனும் இன்னும் மூவரும் சிறையிலுருந்து விடுபட்டு அதன்பின் ஒரு வாரத்திற்குள் அவர்கள் போய்ச்சேர வேண்டிய இடமான இலண்டனைச் சென்றடைந்தனர். கருணாகரனுடன் சிறையிலிருந்த ஏனைய பதினெட்டுப் பேரும் மேலும் பல நாட்களின் பின்பே அங்கிருந்து விடுவிக்கப்பட்டனர். ஆனாலும் அவர்கள் திரும்பவும் ஜேர்மன் நாட்டுப் பொலிசாராற் கைதுசெய்யப்பட்டு அந்த நாட்டிலும் சிறையிற் கஷ்டப்பட்டு ஏறத்தாழ மூன்று மாதங்களின் பின்பே இலண்டனைச் சென்றடைந்ததையும் பின்பு கருணாகரன் அந்த நண்பர்கள் மூலம் அறிந்து கொண்டார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருணாகரன் இலண்டன் சென்றபின் அவரது குடும்பத்தவர்கள் சந்நிதியானுக்கு அபிஷேகம் செய்ததுடன் நான்கு அடி உயரமான முருகன் படமும் ஆலயத்திற்கு உபயமாக வழங்கி தமது நேர்த்திக் கடனை 26 - 11 - 1999ல் நிறைவு செய்தனர்.

ஞானச்சுடரில் பேரவையினர் இணைத்து அனுப்பும் திருநீற்றினைக் கருணாகரனின் வேண்டுகோளின்படி அவரது தாயார் இங்கிருந்து லண்டனுக்கு மகனுக்கு அனுப்பிக்கொண்டிருக்கிறார். கருணாகரன் தனது வாழ்க்கைப் பயணத்தில் ஏற்பட்ட மிகப் பெரிய துன்பத்தையும் அந்தத் துன்பத்தைத் தாங்க முடியாது சந்நிதியானிடம் தான் முறையிட்ட வேளை சந்நிதியான் அதிலிருந்து தன்னைக் காப்பாற்றிய அற்புதத்தையும் நினைத்து ஆனந்தக் கண்ணீர் வடிப்பதுடன் தானும், தனது குடும்பமும் சந்நிதியானின் அடியவர்களாக என்றும் வாழ வேண்டுமென்றும் தனது குடும்பத்திற்குக் கடிதம் எழுதியுள்ளார். அதுமட்டுமன்றித் தான் எழுதுகின்ற கடிதங்கள் அனைத்திலும் "வேல் பிடித்தவன் அருள் புரிவார்" என்று தொடங்கியே கடிதங்கள் எழுதும் வழக்கத்தையும் அவர் கடைப்பிடித்து வருகிறார்.

ஓம் முருகா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சந்நிதியான் - ஒன்பது

சந்நிதி உற்சவம் பக்தி பூர்வமாக இடம்பெறும் ஒரு உற்சவம். உற்சவகாலத்தை உணர்த்துவதற்கு வள்ளிக்கொடி இங்கே தானாகவே முளைப்பது வழக்கம். எமது நாட்டிற்குள் உள்ளவர்கள் மட்டுமன்றி கடல் கடந்து வாழ்கின்றவர்கள் கூட சந்நிதி உற்சவத்திற்காக வருகை தருகின்ற வழக்கம் இங்கே காணப்படுகின்றது. தற்பொழுது நாட்டுச்சூழல் அதற்கு இடம் கொடுக்கா விட்டாலும் கூட வெளிநாட்டில் உள்ளவர்களும் உற்சவகாலத்தை பயபக்தியுடன், மானசீகமாக அங்கிருந்தபடியே அனுசரிப்பதையும் நாம் அறிய முடிகிறது. இவ்வாறு பல்லாயிரக்கணக்கான மக்கள் பிரதேச வேறுபாடுகளை மறந்து தங்கள் தங்கள் சொந்த இடத்தில், தங்களின் குலதெய்வங்களுக்கு இடம்பெறுகின்ற உற்சவம் போன்ற உணர்வுடன் சந்நிதி உற்சவத்தை அனுசரித்து வருகின்றனர். அதே போன்று அன்னதானம், தாக சாந்தி போன்ற செயற்பாடுகளும் மிகத்தாராளமாக இடம்பெறுவதும் நாங்கள் அறிந்தவையே. மொத்தத்தில் பிரதேச, பொருளாதார, சமூக வேறுபாடுகளை மறந்து வேற்றுமையில் ஒற்றுமை காணுகின்ற நிலைக்கு ஆற்றுப்படுத்துகின்ற புனிதமான ஆலயமாக சந்நிதி ஆலயமும், அதனுடைய உற்சவ செயற்பாடுகளும் விளங்கி வருகின்றன.

சாதாரணமாக திருவிழாவிற்கு கூடுகின்ற அடியார்கள் ஒருபுறம், காவடி எடுத்தல் போன்ற பல்வேறு வகையான நேர்த்திக் கடன்களை நிறைவேற்றுபவர்கள் மறுபுறம், மற்றும் உபவாசம் இருந்து உற்சவ காலத்தில் பக்திப் பரவசம் அடையும் அடியார்கள். இன்னொரு வகை என்றவாறு அலைமோதுகின்ற அடியார்கள் கூட்டத்தின் மத்தியிலேயே சந்நிதியான் திருவிழா இடம்பெறும். சந்நிதி உற்சவம் அரசாங்கத்தினுடைய அனுசரனையுடன் நடைபெறும் உற்சவமாகும் என்றாலும் ஒழுங்கமைக்கப்பட்ட நிறுவன ரீதியான உள் கட்டமைப்புக்களின் கீழ் இடம்பெறும் உற்சவமாக இதனை கொள்ள முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு வருடமும் வெவ்வேறு பூசகர்கள் பொறுப்பெடுத்து திருவிழாவை நடாத்துவதே வழக்கம். இதனால் பல்வேறு கைங்கரியங்களையும் எப்படிச் செய்து முடிப்பது. அலைமோதுகின்ற அடியார்கள் கூட்டத்தை எப்படிச் சமாளிப்போம் என்ற ஆதங்கம் உற்சவத்தைப் பொறுப்பெடுத்து நடாத்துகின்ற பூசகர்களுக்கே ஏற்படுவதுண்டு. அனால் அந்தந்த வேலைகள் அந்தந்த தருணத்தில் தாங்களாகவே நாடிவந்து நிறைவேற்றுகின்ற அன்பர்கள் மூலம் வருடாந்த உற்சவ வேலைகள் அனைத்தும் எந்தவித இடையூறும் இன்றி செவ்வனே நிறைவேறுகின்ற அதிசயம் இங்கே இடம்பெறுவதையும் நாம் காணமுடியும்.

அதுமட்டுமன்றி மருதர் கதிர்காமருக்கு சந்நிதி முருகன் வாக்குக் கொடுத்தபடி தானே முக்கியமான தினங்களில் அடியவர்களில் ஒருவர் போல உலாவி எல்லாவற்றையும் பார்த்துக் கொள்வேன் என்று குறிப்பிட்ட வாக்கும் இவ்விடத்தில் நாம் மனம் கொள்ளத்தக்கதாகும். வருடத்தில் 14 தினங்கள் அவ்வாறு அடியவர்களில் ஒருவராக சந்நிதி முருகன் உலா வருகின்றார் என்பதை இங்குள்ள பூசகர்களும், மற்றையவர்களும் நன்கு உணர்ந்து பக்தியுடன் அந்நாட்களில் செயற்படுவதையும் நாம் காணமுடிகின்றது. அவையாவன கொடியேற்றம், கொடியேறி பதினோராம் நாள் தொடக்கம் பூக்காரர் திருவிழா வரையுள்ள நாட்கள், உற்சவத்தை தொடர்ந்து இடம்பெறுகின்ற குளிர்த்தி அபிடேக தினம், கந்தசஷ்டி, சூரன்போர் நாள், சித்திரை வருடப்பிறப்பு, தைப்பூசம், கதிர்காமத்திற்கு வழியனுப்பும் நாள், திரும்பும் நாள், வைகாசி விசாகம் என்பவையாகும். இவ்வாறு சந்நிதி முருகன் அடியவர்களில் ஒருவராக நடமாடிய சம்பவத்தையும், உண்மையான பக்தி உணர்வுடன் முருகேசு சுவாமிகளுடன் கூட இருந்த அடியார்களும் அவ்வாறு நடமாடிய அக் காட்சியை காணுகின்ற பேறு கிடைத்த நிகழ்வினையும் 1998ஆம் ஆண்டு தைமாத மலரில் குறிப்பிட்டுள்ளோம்.

முருகேசு சுவாமிகள் தனது இறுதிக்காலத்தில் தன்னுடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையை உணர்ந்து சந்நிதியில் அருணாசலம் என்ற அன்பருடைய வீட்டில் அவருடைய பராமரிப்பில் தங்கியிருந்தார்கள் அந்த நிலையில் ஆச்சிரமத்தின் சுவாமிகளும் அடியேனும் அவரைப் பார்ப்பதற்கு சென்றிருந்தோம் அப்பொழுது அவர் எங்களிடம் "**இனிமேல் சந்நிதியானுடனேயே இருப்பேன் அவரை விட்டு எங்கும் போகமாட்டேன்**" என்று குறிப்பிட்டிருந்தார்கள். அவ்வாறே அவர் சந்நிதியிலேயே இருந்து "**ஞாயிற்றுக்கிழமை என்னை சந்நிதியான் அழைப்பான்**" என்று குறிப்பிட்டதற்கிணங்க ஞாயிற்றுக்கிழமையே இறைபதம் அடைந்ததும் இன்றும் எமது மனக்கண்ணில் காட்சி தந்து கொண்டிருக்கும் சம்பவங்களாக உள்ளன.

தற்பொழுது ஆச்சிரமத்தில் புங்குடுதீவுச் சுவாமிகள் தங்கியிருக்கிறார்கள். முருகேசு சுவாமிகள் 1997ல் இறைபதம் அடைந்த பின்பு சந்நிதியானுடைய திருவருளின் நிமிர்த்தம் புங்குடுத்தீவுச் சுவாமிகள் இங்கே அழைக்கப்பட்டிருக்கிறார்கள். முருகேசு சுவாமிகள் இறைபதம் அடைந்த 5-ம் நாள் இந்த அழைப்பிற்கான அத்திவாரம் இடப்பட்டுள்ளது. புங்குடுத்தீவுச் சிவன் கோவில் உற்சவத்தில் வேட்டைக்கு வீதி உலா சென்ற சுவாமி சரிவதைப் பார்த்து அதனை தனது தோள்களால் தாங்க முற்பட்ட புங்குடுத்தீவுச் சுவாமிகள் இறுதியில் அதனால் நோய்வாய்ப்பட்டு வைத்தியசாலைக்குச் சென்றார்கள் ஆனாலும் அவரது உடம்பில் ஏற்பட்ட உள் நோயை மாற்றமுடியாத நிலையில் சந்நிதியானுடைய அழைப்பிற்கிணங்க இறுதியில் சந்நிதிக்கே வந்து சேர்ந்தார்கள்.

புங்குடுதீவுச் சுவாமிகள் இங்கே வருவதற்கு முன்பே தற்பொழுது ஆச்சிரமத்தில் பேரவையால் நிகழ்வுகள் நடாத்தப்படும் அரங்கம், அதன் அமைப்பு அந்த நிகழ்வுகள் இடம்பெறும் சில காட்சிகள் போன்றவற்றை எல்லாம் தன்னுடைய ஞானத்தினால் உணர்ந்துகொள்ளச் செய்து சந்நிதியான் இவரை ஆட்கொண்டுள்ளார். தற்பொழுது ஆச்சிரமத்தில் தங்கி உள்ள சுவாமிகள் ஞானக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணினால் கண்ட அதே அரங்கம், அதே காட்சிகளை ஆச்சிரமத்தில் நேரடியாகவே காண்கின்ற அற்புதத்தை சந்நிதியான் அவருக்கு வழங்கியுள்ளார். இவற்றை எல்லாம் புங்குடுதீவுச் சுவாமிகள் இங்கே வந்து சில வருடங்களின் பின்பே எமக்குப் பக்குவமாக வெளிப்படுத்தினார்கள். ஆம்! ஞானிகளும், யோகிகளும் இவ்வாறுதான் சந்நிதி ஆலயத்தில் ஒன்று கூடுகின்றனர்.

மயில்வாகன சுவாமிகள் ஆனந்தாச்சிரமத்தில் அருள் வாழ்க்கை வாழ்ந்து அன்னதானப் பணியை மேற்கொண்ட காலகட்டத்தில் அவரது ஆச்சிரமத்திற்கு அயலில் ஐரோப்பியர்களான ஜேர்மன் சுவாமி என அழைக்கப்பட்ட கௌரிபால சுவாமிகள், யானைக்குட்டி சுவாமிகள் (சோல்பரிப் பிரபுவின் மகன்) தென் இந்தியாவைச் சேர்ந்த நரிக்குட்டி சுவாமிகள் மற்றும் மௌன சுவாமி திருவாசக சுவாமி என அழைக்கப்படும் சபாரத்தினம் சுவாமிகள் போன்றவர்கள் அமைதியான அருள் வாழ்க்கை வாழ்ந்துள்ளனர்.

அதே போன்று இன்றும் சந்நிதியான் திருவருளால் சந்நிதி சூழலில் அன்னதானச் செயற்பாடுகள் சிறப்பாக இடம்பெற்றுக் கொண்டிருக்கும் அதே வேளை பவா சுவாமிகள், புங்குடுதீவு சுவாமிகள், சடை சுவாமிகள் போன்ற அருளாளர்களும் ஆலயச் சூழலை அலங்கரித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். அதுமட்டுமல்ல சந்நிதியில் அடியார்களுக்கு கிடைக்கின்ற அமைதியும், சாந்தியும், வித்தியாசமான பக்தி உணர்வும் இன்றும் அங்கே கிடைத்துக் கொண்டுதான் இருக்கின்றது.

எல்லாம் அவன் அருளாலே.

ஓம் முருகா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சந்நிதியான் - பத்து

சந்நிதி ஆலயத்தில் ஏற்படுகின்ற பக்தி உணர்வு ஒரு தனித்துவமான உணர்வு. இந்த பக்தி உணர்வு எங்குமே ஏற்படாத ஒன்று, என்று கூடக் கூறலாம். மேலும் இங்கே தரிசிக்க வருகின்ற அடியவர்களின் சமூக, பொருளாதார, பண்பாட்டு அம்சங்களுக்கு ஏற்ப அவர்கள் பக்தி செலுத்துகின்ற முறையும் தனித்துவமாக அமைந்திருப்பதையும் நாம் காணமுடியும்.

ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் சூழ்நிலைக்கும் தனித்துவத்திற்கும் ஏற்றவாறு சந்நிதி ஆலயத்தில் வேறுபட்ட முறைகளில் வழிபாடு செலுத்துவதை நாம் காணமுடியும். இவ்வாறு பக்தி செலுத்துகின்ற பக்தர்களுக்கு ஏற்ற விதத்திலேயே சந்நிதியானும் தமது அருட்கடாட்சத்தை அவர்கள் மீது மேற்கொண்டு வருவதும் இந்த ஆலயத்திற்குள்ள புதுமையாகும். கடந்த உற்சவ காலத்தில் இவ்விதமாக ஏற்பட்ட ஒரு அற்புத நிகழ்வினை அடியார்களுக்கு வழங்குகின்றோம்.

திரு. எஸ். துரைராசா அவர்களுக்கு வயது 67, தொண்டைமானாற்றின் அயற்கிராமமான கெருடாவிலில் வசித்து வருகின்றார். பல்வேறு துறைகளில் அனுபவமும், ஆற்றலும் பெற்று விளங்குகின்ற தனிநபர் ஒருவரை நாம் கூறவேண்டுமாயின் அதற்குச் சிறந்த உதாரணமாகத் திரு. துரைராசா அவர்களை நாம் குறிப்பிடலாம். குறிப்பிட்டுக் கூறுவதானால் விவசாயம், கைத்தொழில், விஞ்ஞானம், வைத்தியம், இசை, ஆங்கிலமொழி, விளையாட்டு மற்றும் சிலம்படி, மல்யுத்தம் போன்ற பல்வேறுபட்ட துறைகளிலும் ஆற்றலும் அனுபவமுள்ளவராக விளங்குவதுடன் முற்போக்கான சமூகச் சிந்தனையுள்ளவராகவும் காணப்படுகின்றார். மேலும் இவர் சந்நிதியானை வழிபடுவதிற் கூட ஒரு வித்தியாசமான இயல்புள்ளவராகவே தென்படுகின்றார். அதாவது உள்ளத்தில் தூய்மையும் ஆழமான பக்தியும் இருந்தாலும் வழிபடுகின்ற முறையில் ஒரு உரிமையும், இறுக்கமான தன்மையும் காணப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்நிதியானிடம் வருவது மிகக்குறைவு. வந்தாலும் மிகக் குறுகிய நேரம் மட்டுமே அங்கே வழிபடுவார். மேலும் சந்நிதியானிடம் நான் உன்னை வணங்குகின்றேன், அதேபோல் நீயும் உனது கருணையைக் காட்டு என்று மட்டுமே அவர் வேண்டுதல் செய்வார்.

இவர் பல பொருட்களைக் குடிசைக் கைத்தொழில் மூலம் புதுமையாக உற்பத்தி செய்யும் ஆற்றல் மிக்கவர். இந்த வகையில் மனத்திற்கு மகிழ்ச்சியையும், அமைதியையும் அதே நேரம் பக்தியைத் தூண்டக்கூடியதுமான வாசனை பொருந்திய தசாங்கத்தினைத் தயாரிக்கும் ஆற்றல் இவரிடம் நீண்டகாலமாகவே இருந்து வருகிறது. இதனை ஒரு பொழுது போக்காக காலத்திற்குக்காலம் இவர் செய்வதுண்டு. சந்நிதியானுடைய உற்சவகாலத்தில் தூய்மையான தசாங்கத்தினைப் பலரும் பயன்படுத்த வேண்டுமென்பதற்காக இந்த வருடம் கூடுதலாக அதனை உற்பத்தி செய்கின்ற விருப்பம் இவருக்கு ஏற்பட்டது. இவ்வாறு தூய்மையாக இவரால் உற்பத்தி செய்யப்பட்ட தசாங்கம் எமது ஆவணிமாத ஞானச்சுடர் வெளியீட்டின் பொழுது அடியார்களுக்கு அறிமுகம் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

2000 ஆம் ஆண்டின் வருடாந்த உற்சவத்தின் சப்பறத்திருவிழாவின் காலைத் திருவிழாவிற்கான ஆயத்தங்கள் ஆலயத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கிற அதே நேரம் சந்நிதியான் ஆச்சிரமத்தில் அன்னதானச் செயற்பாட்டிற்கான ஆயத்த வேலைகள் ஒருபுறமும் உற்சவகால விசேட நிகழ்விற்கான வேலைகள் மறுபுறமாகவும் எல்லோரும் தங்கள் தங்கள் வேலைகளில் உற்சாகமாகவும் அதேநேரம் பக்தி உணர்வுடனும் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். இந்தச் சந்தர்ப்பத்தில் திரு. துரைராசா அவர்கள் ஆச்சிரமத்தின் வாயிலைத் திறந்துகொண்டு உள்ளே வருகின்றார்கள். அப்பொழுது அன்னதானத்திற்கான முன் ஆயத்த வேலைகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்த பபா சுவாமிகளும் அந்த இடத்தில் தென்படுகின்றார்கள் இந்த நிலையிற் பபா சுவாமிகளைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டதுதான் தாமதம் திரு. எஸ். துரைராசா அவர்கள் தன்னை மறந்த நிலையில் பபா சுவாமிகள் நிற்கின்ற இடத்தை வந்தடைந்தார்கள். அவ்வாறு வந்து சேர்ந்தவர் திடீரென பபா சுவாமிகளின் பாதங்களில் சாஷ்டாங்கமாக விழுந்து அவருடைய பாதங்களைப் பற்றியபடி உள்ளம் உருகிக் கண்ணீர் ததும்ப அவரை வழிபட ஆரம்பித்துவிட்டார்கள்.

எதிர்பாராது நடைபெற்ற இந்தச் சம்பவத்தைக்கண்ட ஆச்சிரமத்தின் சுவாமிகள் உட்பட அனைவரும் ஆச்சரியமும் வியப்புமடைந்தனர். ஏனெனில் வன்றொண்டனான திரு. எஸ். துரைராசா அவர்கள் சாஷ்டாங்கமாக விழுந்து பபா சுவாமிகளை வணங்குவதும், கண்ணீரே விடாத துரைராஜா அவர்கள் கண்ணீர் விட்டுத் தேம்பித்தேம்பி அழுவதும் பபா சுவாமிகளை இறுக்கமாகப் பற்றிக்கொண்டிருப்பதும், உண்மையில் பார்ப்பதற்கு புதுமையாகவும், அதேநேரம் நெஞ்சை நெகிழ வைக்கின்ற காட்சியாகவும் இருந்தது. யாருக்கும் எதுவும் விளங்கவில்லை எந்த விதத்திலும் ஏற்கனவே தொடர்புகொண்டிராத பபா சுவாமிகளை இவர் ஏன் வணங்க வேண்டும் அதுவும் இப்படியான ஒரு உணர்ச்சி வெள்ளத்தில் ஏன் வணங்க வேண்டுமென்பதெல்லாம் யாருக்கும் புரியாத புதிராகவே தென்பட்டது.

சந்நிதியானை வழிபடுகின்ற பொழுது ஒரு நண்பனுடன் கொள்ளுகின்ற உறவைப்போன்று உரிமையுடனும் அதிகாரத்துடனும் வழிபடுகின்ற வன்றொண்டனான திரு. எஸ். துரைராஜா அவர்கள் பபா சுவாமிகள் என அழைக்கப்படும் திரு. க. அருட்செல்வம் அவர்களின் பாதங்களைப்பற்றிய வண்ணம் பக்திநிலையில் காணப்பட்டது உண்மையில் எல்லோருக்கும் வியப்பை அளிக்கத்தான் செய்தது.

இறுதியில் ஒருவாறு பபா சுவாமிகள் திரு. துரைராஜா அவர்களைத் தேற்றி தனது அன்பையும் ஆசீர்வாதத்தையும் துரைராஜா அவர்கள் மேல் செலுத்தி அவரை இயல்பு நிலைக்குக் கொண்டு வருவதற்கு முயற்சித்தார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவாறு பக்தி ததும்பும் அந்த உணர்ச்சி நிலையிலிருந்து விடுபட்ட திரு. துரைராஜா அவர்கள் இரவு கனவிலேதான் கண்ட காட்சியையும் ஒரு நண்பனைப்போலத் தனக்கு சந்நிதியான் இடித்துக் கூறிய வார்த்தைகளையும் உள்ளம் நெகிழ பபா சுவாமிகளுக்கு எடுத்துக் கூறினார்கள்.

"அன்று இரவு அதிகாலை 3 மணியளவில் சந்நிதியான் பபா சுவாமிகளின் வடிவில் தோன்றி திரு. துரைராஜா அவர்களின் நெஞ்சிலே அடித்து **சும்மா கொடடா சுகம் வரும், சும்மா கொடடா சுகம் வரும்**"

என்று கட்டளையிடுவது போல இடித்துக் கூறியுள்ளார்கள். அதன் பின்பே சந்நிதியானுடைய இடத்தில் அதுவும் உற்சவ காலத்தில் தசாங்கத்தினை இலாபநோக்கத்திற்காக அடியார்களுக்கு விற்பனை செய்கின்ற தவறை திரு. துரைராஜா அவர்கள் உணர முற்பட்டார்கள். அதுமட்டுமல்ல இரவு சந்நிதியான் எந்த சாமியார் வடிவத்தில் காட்சி கொடுத்து கட்டளை இட்டாரோ அதே பபா சுவாமிகளை இன்று காலையிலேயே தனக்கு நேரடியாகக் காண்பித்துவிட்ட அற்புதத்தை வார்த்தைகளால் விளக்க முடியாது ஆனந்தக் கண்ணீர் சொரிந்தார்கள்.

திரு. துரைராஜா அவர்கள் நாம் ஏற்கனவே குறிப்பிட்டது போல ஒரு வித்தியாசமான இயல்புள்ளவர் மட்டுமல்ல முற்போக்கான சிந்தனையுமுள்ளவர். மதம் என்று கூறும் பொழுது அது தனியே வழிபாடு செய்வதாக மட்டும் இருக்கக் கூடாது ஒருவன் வாழுகின்ற பொழுதே மத தர்மத்துடன் வாழ வேண்டுமென்று நினைக்கின்றவர். இந்த வகையில் ஆலயம் என்பது பக்திக்குரிய இடமாக இருக்க வேண்டுமே தவிர அங்கே வியாபாரம் இருக்கக்கூடாது. என்று ஏனையவர்களுக்கு அறிவுரை கூறுகின்றவர்.

இவ்வாறு அறிவுரை கூறுகின்ற அன்பர் தூய்மையானதும் பக்தி உணர்வை ஏற்படுத்தக் கூடியதுமான தசாங்கம் அடியார்களுக்கு கிடைக்க வேண்டுமென்று நினைத்துச் செயற்பட முற்பட்டவர் இறுதியில் ஆலயச் சூழலில் அதனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு வியாபாரப் பொருளைப் போல சந்தைப்படுத்தும் செயற்பாட்டில் தன்னை அறியாமலேயே ஈடுபடத் தொடங்கி விட்டார். இது அவருடைய கொள்கைக்கும், சிந்தனைக்கும் முரண்பட்ட செயற்பாடு அல்லவா? இது போன்ற ஒரு தவறை நாம் எமது நண்பனுக்குச் செய்தால் அவன் சும்மா இருப்பானா அதனால் தான் போலும் நண்பனைப்போல் சந்நிதியானும் திரு. துரைராஜா அவர்களின் நெஞ்சினிலே அடித்து தசாங்கத்தினை சும்மா கொடடா சும்மா கொடடா என்று கூறி அவர் விட்ட தவறினை எடுத்துக் காட்டியுள்ளார்.

மேற்படி சந்நிதியானுடைய அற்புத நிகழ்வினை உற்சவம் நடைபெற்றுக் கொண்டிருந்த அன்றைய தினமே அடியேனைச் சந்தித்த பொழுது உள்ளம் உருக என்னிடம் எடுத்துக் கூறினார்கள். மேலும் திரு. துரைராஜா அவர்கள் தனக்கு வாழ்க்கையில் எதிர்பாராத இடைஞ்சல்கள் துன்பங்கள் ஏற்படும் பொழுது தான் எவ்வாறு சந்நிதியானிடம் சென்று உரிமையுடன் வழிபடுவேனோ அதே போல சந்நிதியானும் பபா சுவாமிகளின் உருவத்தில் வந்து தனது தவறை சுட்டிக் காட்டி, உரிமையுடன் தனக்கு படிப்பனையை ஏற்படுத்தி இறுதியில் தன்னையும் ஒரு அடியானாக ஆட்கொண்டு விட்ட அற்புதத்தை உணர்ச்சி பொங்க எடுத்துக் கூறினார்கள்.

இந்த சம்பவத்தைத் தொடர்ந்து திரு. துரைராஜா அவர்கள் ஆலயச் சூழலில் சில வியாபார ஸ்தாபனங்கள் மூலம் தசாங்கத்தினை விற்பனை செய்வதை உடனடியாக நிறுத்தி உண்மையான பக்தி உணர்வுடன் உற்சவகாலத்தில் சந்நிதியானிடம் வருகை தந்த பல அன்பர்களுக்கு அவற்றை தானாகவே தேடிச்சென்று இலவசமாக வழங்கும் பணியில் ஈடுபடத் தொடங்கிவிட்டார்.

அது மட்டுமன்றி ஏற்கனவே தசாங்க உற்பத்தியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த திரு. துரைராஜா அவர்களுக்கு பத்தாம் திருவிழாவின் பொழுது ஒரு யோசனை தோன்றியது. அதாவது தசாங்க உற்பத்தியின் பொழுது உருதுகின்றவற்றையெல்லாம் ஒன்று சேர்த்து ஒரு பெரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தசாங்கமாக்கி சந்நிதியானின் மூலஸ்தானத்தில் அதனை ஏற்ற வேண்டுமென்பதே அந்த யோசனையாகும்.

என்ன அதிசயம் அதன் பின்பு ஆம்! அந்த பத்தாம் திருவிழாவின் பின்பு அவர் அச்சில் இட்டு உருவமைக்க முயற்சிக்கும் பொழுது உருவாக்கப்படுகின்ற தசாங்கங்களின் எண்ணிக்கையை விட உருதுகின்றவற்றின் எண்ணிக்கையே அதிகமாக சேரத் தொடங்கியது.

அணைக்கட்டை கட்டுவதற்கு செம்மணச் செல்வியிடம் வந்த முழுமுதற்கடவுளான சிவபெருமான் உருதுகின்ற பிட்டு எல்லாம் தனக்கு என்று கூறி அணைக் கட்டை கட்டுகின்ற வேலையை ஆரம்பித்த பொழுது செம்மணச் செல்வி அவித்த பிட்டுக்களில் அதிகமானவை உருத ஆரம்பித்தது போல இங்கேயும் உருதுகின்ற தசாங்கங்களின் அளவே அதிகமாக காணப்படுகின்ற அதிசயத்தையும் சந்நிதியான் ஏற்படுத்தினார். முடிவாக ஒன்றுக்கு மேற்பட்ட நாட்கள் எரியக்கூடியதான இராட்சத தசாங்கம் ஒன்றை உற்பத்தி செய்து சந்நிதியானுக்கு வழங்குகின்ற அற்புத அனுபவத்தையும் திரு. துரைராஜா அவர்கள் அனுபவிக்க முடிந்தது.

சந்நிதியில் கூடுகின்ற அடியார்கள் பலவகைப்பட்டவர்கள் ஆனாலும் முழு நம்பிக்கையுடன் உண்மையாகவும், தூய்மையாகவும் அடியார்கள் எந்தமுறையில் வழிபாடு செய்தாலும் அவர்களது வழிபாட்டு முறைக்கும் பக்தி உணர்விற்கும் ஏற்ப சந்நிதியானும் தனது அருள் வெள்ளத்தை அவர்கள் மேல் சொரிந்து அவர்களை ஆனந்தக்கடலில் மிதக்க வைக்கின்றான். அது மட்டுமல்ல இந்த உண்மையான பக்தர்கள் விடுகின்ற தவறுகளையும் சுட்டிக்காட்டியோ அல்லது படிப்பினையை வழங்கியோ அவர்களைத் தொடர்ந்தும் தனது அடியவர்களாகவே அணைத்து வைக்கின்ற அற்புதத்தையும் சந்நிதியான் நிகழ்த்தி வருகின்றார்.

திரு. துரைராஜா அவர்களுக்கு ஏற்பட்ட மேற்படி அனுபவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனை எல்லோருக்கும் எடுத்துக் காட்டுகின்றதல்லவா? ஆம்! ஒரு நண்பனுடன் உறவாடுவதைப் போன்று துரைராஜா அவர்கள் சந்நிதியானிடம் உரிமையுடன் வழிபாடு செய்து வருகின்றார். அதே போன்று சந்நிதியானும் ஒரு நண்பனிடம் தவறை சுட்டிக்காட்டுவதைப் போன்று அவரது நெஞ்சிலே அடித்து அவரது தவறைச் சுட்டிக்காட்டி அவரை தனது அடியவனாக்கியுள்ளான். இதுதான் சந்நிதி ஆலயத்தின் தனித்துமான சிறப்பாகும்.

ஓம் முருகா!



கனடா ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் எழுந்தருளி வேலவனின் எழில்மிகு தோற்றம் - 2010



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்சவ காலத்திற் சந்நிதி ஆலயம் பக்தர்கள் கூட்டம் மிகப் பெரிய அளவிற் கூடுகின்ற இடமாக இருந்தாலும் இந்த நெருக்கடிகள் மத்தியிலும் பக்திப் பரவசமூட்டும் காட்சிகளும் சம்பவங்களும் இடம் பெற்றுக்கொண்டே இருக்கின்றன என்பதை நாம் எமது மூதாதையர் காலத்திலிருந்தே கேட்டும் அறிந்தும் வருகின்றோம்.

இத்தகைய காட்சிகளும் சம்பவங்களும் சந்நிதி ஆலயத்தைப் பொறுத்தவரை அவை எப்போதோ நடந்து முடிந்த சம்பவங்களாக இல்லாமல் இன்றும் எம்கண் முன்னாலேயே இடம்பெற்றுக் கொண்டிருக்கின்ற சம்பவங்களாகவும் காட்சிகளாகவும் இருப்பது எம்மை மெய்சிலிர்க்க செய்வதாகவே உள்ளது.

உற்சவ காலத்திலும் நடந்து முடிந்த கந்தசஷ்டி விரத காலத்திலும் உண்மையான பக்தி உணர்வுடன் சந்நிதியானைத் தரிசிக்கச் சென்ற அடியார்களுக்குச் சந்நிதியான் ஏற்படுத்திய திருவிளையாடல்களும், உள்ளத்தை உருக்கும் மெய்சிலிர்க்கும் நிகழ்ச்சிகளும் ஏராளம். இத்தகைய தெய்வீக அனுபவங்கள் எல்லாம் எல்லோருக்கும் வெளிப்படுத்த முடியாதவை. தாங்களே அவற்றை ஜீரணித்துச் சந்நிதியானின் திருவிளையாடலை நினைத்து தமக்குள்ளேயே உள்ளம் உருகுகின்ற சம்பவங்களே அதிகம் இடம்பெறுகின்றன.

ஆனாலும் இவற்றிற்கு மாறாக ஆலயச்சூழலில் முக்கியமாக உற்சவத்தின் இறுதி நாட்களில் வெளிப்படையாகவே இடம்பெறுகின்ற அற்புத நிகழ்வுகளும் நடந்து கொண்டிருக்கின்றன என்பதைக் காட்டுகின்ற ஒரு சம்பவத்தை அடியார்களுக்கு இங்கே வழங்குகின்றோம்.

திரு. தம்பிராசா பரஞ்சோதி அவர்கள் எமக்கு எழுதி அனுப்பியுள்ள அந்தச் சம்பவத்தை எதுவித மாற்றமுமின்றி அப்படியே இங்கே தருகின்றோம். திரு. த. பரஞ்சோதி அவர்கள் அமைதியான சுபாபமுடைய ஒரு முருகபக்தர், அத்துடன் ஓய்வுபெற்ற தபாலதிபர் வல்வெட்டித்துறையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறப்பிடமாகக் கொண்ட பரஞ்சோதி அவர்கள் தற்பொழுது 124/2 இராசாவின் தோட்டம், நல்லூர் என்ற முகவரியில் வசித்து வருகிறார்.

13-09-2000 அன்று தீர்த்தோற்சவதினம். அதிகாலை வேளை அப்பொழுது தான் பொழுது மெல்ல மெல்லப் புலரத் தொடங்கியது. ஆலய முகப்பில் இரவிரவாக ஜோதியாய்ச் சுடர்விட்டுப் பிரகாசித்துக் கொண்டிருந்த கர்ப்பூர ஜீவாலை வான் முட்டப்புகை எழும்பிக்கொண்டே தொடர்ந்தும் பிரகாசித்துக் கொண்டிருந்தது. காவடிகள் தொடர்ந்து வந்து கொண்டும் ஆலயச்சூழலில் ஆடிக் கொண்டும், பின்பு இறக்கப்பட்டுக் கொண்டுமிருந்தன.

அப்பொழுது தவில்காரர் ஒருவர் செல்ல அவரைத் தொடர்ந்து ஏழு வயதுச் சிறுவன் ஒருவன் காவடியொன்றைத் தோள்களிற் சுமந்தபடி நடந்து செல்கின்றான். ஆம்.... சாதாரணமாக நடக்கும்போது ஏற்படும் அங்க அசைவுகள் கூட நடையில் தெரியவேயில்லை. நட்டகல்லொன்று நடப்பதைப்போல அச்சிறுவன் வர அவனைப் பின்தொடர்ந்து அவனது பெற்றோர்கள் வந்து கொண்டிருக்கிறார்கள். எத்தனையோ விதம் விதமான கரக காவடி ஆட்டங்களைக் கண்டு இரசித்த ஆயிரக்கணக்கான கண்களுக்கு அச்சிறுவன் ஒரு வேடிக்கைப் பொருளாக ஆகிவிட்டான். அவனது பெற்றோர்களுக்கோ சொல்ல முடியாத வேதனை. கேலிப்பார்வைகளையும் கிண்டல் பேச்சுக்களையும் தாங்கமுடியாது தலை குனிந்தபடி தன் மகனைத் தொடர்ந்து சென்றுக் கொண்டிருக்கின்றனர். தனக்குத் தெரிந்த அத்தனை வித்தைகளையும் காண்பித்துக் கொண்டிருக்கிறார் தவில்காரர். ஆனாலுமென்ன சிறுவன் ஆடவேயில்லை! இவ்வாறாக ஆலயத்தின் வெளிப்பிரகாரத்தைச் சுற்றிக்கொண்டு வந்து, உட் பிரகாரத்தின் நுழைவாயிலான காண்டாமணிக் கோபுரத்தை நெருங்கிக் கொண்டிருக்கின்றனர்.

அதற்குச்சற்று முன்பு தான் சில காவடிகள் முருகனின் வாயிலிலே இறக்கப்பட்டன. அக்காவடிகளுடன் வந்த ‘உடுக்கு’க் கலைஞர் ஒருவர் சிறிது நேரம் முருகன் வாயிலிலே நின்று முருகப் பெருமானை வணங்கிவிட்டுத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரும்பிக்கொண்டிருந்தார். அவ்வாறு திரும்பிவந்த போது ஆடாது காவடியைச்சுமந்து நடந்து வந்து கொண்டிருந்த சிறுவனையும் அவனுடன் வந்தவர்களையும் காண்கின்றார். வியப்புமேலிட, வேதனையுடன் நின்ற தவிற்காரரை நோக்கி **"ஆடாத மலைகளையும் ஆட்டுவிப்பான் ஆறுமுகன் என்று வாசி"** என்று தவிற்காரரிடம் உரத்துக் கூறுகின்றார். தவிற்காரருக்கோ கொஞ்சமும் நம்பிக்கையில்லை. என்றாலும் வந்தவர் சொன்னதற்காக அரைகுறை மனத்துடன் வாசிக்கத்தொடங்கினார்.

என்ன ஆச்சரியம்! அங்கே.... ஆடாத மயிலும் தோகை விரித்து ஆடியது! பாடாத குயிலும் பாடியது!! பூவாத மலரும் பூத்து மணம் பரப்பியது!!! ஆம்.... ஆடாத அச்சிறுவன் வாடாத மலராக முகம் மலர ஆடுகின்றான், ஆடுகின்றான், ஆடுகின்றான், "அந்தமாதிரி"யாக ஆடுகின்றான். எத்தனையோ கரக ஆட்டங்களைக் கண்டு இரசித்தவர்கள் வியப்புடன் போற்றி நிற்க ஆடுகின்றான்! வேடிக்கை பார்த்துக் கேலிக்கை பேசியவர்கள் விழி பிதுங்கி நிற்க ஆடுகின்றான். வெட்கத்தினாற் தலை குனிந்து நின்ற தாய் தந்தையர்கள் பூரிப்பினால் புன்னகை பூக்க, மைந்தனவன் மனமகிழ்ந்து ஆடுகின்றான். "ஏழு வயதுச் சிறுவன் என்ன மாதிரியாக ஆடுகின்றான்" என்று பக்த அடியார்கள் போற்றி நிற்க மிக அற்புதமாக ஆடுகின்றான் - காவடி ஆடுகின்றான். பெருங்கூட்டமே திரண்டு வந்து பார்க்கின்றது - சந்நிதி முருகனின் திருவிளையாடலை அருளாட்சியின் அற்புதக் காட்சியைக்கண்டு போற்றாதவர்களேயில்லை! முருகா, முருகா, முருகாவென்ற கோஷம் வானை நோக்கி எழுந்தவண்ணமேயிருந்தது......

செல்வச் சந்நிதியானே சிந்தனைக்கினியவனே
நாடிவரும் அடியவர்கள் வேண்டும் வரங்கள் தந்து
நலம் பெருகச்செய்பவனே நமையெல்லாம் காப்பவனே
கேட்கும்வரம் தந்திடையா! வேண்டும் முன்பே
வந்திடையா

ஓம் முருகா!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





ஜேர்மன் சுவாமி கௌரிபாலா (1907-1984)வுடன், மயில்வாகனம் சுவாமிகளின் அருள்தோற்றம். (1981)

சுவாமி கௌரிபாலா (1981) ஜேர்மன் சுவாமி



தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில்
வள்ளி அம்மன் வாசலில் அடியார்கள் புடைசூழ பிரதம பூசகர்
ஆலயமரபிற்கு இணங்க வாய்கட்டிய நிலையில்
அபிஷேக நிகழ்வை நடாத்துகின்ற காட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கனடா ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் 2010 உற்சவத்தில்
விளக்கு எடுக்கும் சிறுமிகளின் அழகுத் தோற்றம்



அமுது படைக்கப்பட்டு நடைபெறும் உற்சவகால
விஷேட பூசை இடம் பெறுகிறது.
கனடா ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயம் - 2010



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மூலவருக்கு உற்சவகால விஷேட பூசை பக்திபூர்வமாக இடம் பெறுகிறது.
கனடா ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயம்-2010



கனடா ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் 2010 ஆம் ஆண்டு வருடாந்த உற்சவத்தில் வேலவன் வீதி உலா வருவதற்கு தயாராகும் காட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கனடா ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் உற்சவ காலத்தில் தினம் தோறும் நடைபெறும் அபிஷேக நிகழ்வினை ஆலய பிரதம குருக்கள் பொ. புவனேந்திர ஐயர் அவர்கள் நிகழ்த்திக் கொண்டிருக்கிறர்கள்-2010

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

கனடா ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் வேலவன் தெய்வானை அம்மன் சகிதம் அடியார்களுக்கு அருள் வழங்கும் அற்புதக் காட்சி

13945 cc





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாயன்மார் காலத்தில் மட்டுமல்ல தற்பொழுதும் ஆண்டவனின் அற்புதங்கள் நடைபெற்றுக்கொண்டு தான் இருக்கின்றன. கலியுகக் கந்தன் சந்நிதி முருகனின் அற்புதங்கள் இதனை இப்பொழுதும் எமக்கு எடுத்துக் காட்டிக் கொண்டிருக்கின்றன. இவற்றில் மானிட அறிவுக்குட்பட்டு எம்மால் உணரக்கூடிய ஒரு சில துளிகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

இந்த நிஜங்களை நீங்கள் வாசிப்பதற்கு கிடைத்த சந்தர்ப்பம் கூட ஒருவகையில் உங்களுக்குக் கிடைத்த ஒரு பேறுதான் என்பதை இதனை உணர்வுடன் வாசிக்கும் பொழுது நீங்கள் உணர்ந்து கொள்ள முடியும்.

-ஆசிரியர்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org